
சு பா
ரூ.15/-
துரோகம்
துரத்தும்







**தெ**ற்குப் பக்கம் வைத்த ஜன்னலிலிருந்து கடற்காற்று சிலுப்பிக் கொண்டு உள்ளே நுழைந்தது.

அப்போதுதான் மாலைக் குளியலை முடித்து விட்டு வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தார், ரவிகுமார்.

எதிரே இருந்த கண்ணாடியில் பார்த்தபோது, அவருடைய கம்பீர மீசையில் நிறைய வெள்ளிக் கம்பிகள் சேர்ந்து விட்டது தெரிந்தது.

நாற்பத்தியோரு வயது என்பது பக்குவ

மான வயது என்று தோன்றியது. அவருடைய தொழிலில் அவர் பார்த்த மேடு பள்ளங்களும், கரடுமுரடான முள்பாதையும் அவரை நிறைய பக்குவப்படுத்தி விட்ட தாகவே தோன்றியது.

ஆரம்ப நிலையில் இருந்ததற்கும் இன்று பதவி உயர்வு பெற்று பொறுப்பான நாற்காலியை அலங்கரித்திருப்பதற்கும் இடையில் எத்தனை அனுபவங்கள்! எத்தனை பாடங்கள்!

ரவிகுமாருக்கு மெலிதாக ஆடும் அந்த சாய்வு நாற்காலி பிடித்திருந்தது.

"கணேசா..." என்று குரல் கொடுத்தார்.

அவருடைய பத்து வயது மகன் காமிக்ஸ் புத்தகத்துடன் உள்ளே நுழைந்தான்.

"என்ன டாடி?"

"ஒரு காஸெட் எடுத்துப் போடேன்"

"எப்பப் பார்த்தாலும் ஒரு பழைய காஸெட்டையே போட்டு கேக்கறியே, டாடி? உனக்கு போரடிக்கலே?"

"மைக்கேல் ஜாக்ஸன், ஏ.ஆர்.ரஹ்மான் எல்லாம் கேக்கறதுக்கு உனக்குத் தான் தனியா ஒரு ரெக்கார்டர் வாங்கிக் கொடுத்திருக்கேன்ல? அப்பாவுக்குப் பிடிச்ச ஒரு கேஸட்டை உன் கையால போட்டுப் போ, ராஜா..."

கணேசன் அங்கிருந்த ஆடியோ சிஸ்டத்தைத் தொடாமல் அதற்கு சற்று மேலே பொருந்திய மர அலமாரியில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த காஸெட்களின் முதுகில் விரல் ஒட்டினான்.



ஏழாவது வரிசை, ஐந்தாவது காஸெட் என்று மனதில் ஏதோ ஒரு கட்டளை சொன்னது.

எடுத்தான். சிஸ்டத்தில் போட்டான். ஆன் செய்தான்.

"நான் கேக்கற பாட்டு உனக்கு டிஸ்டர்பன்ஸா இருக்கப் போவுது... கதவை சாத்திட்டுப் போ..."

"நானும், அம்மாவும் டி.வி. பார்க்கப் போறோம், டாடி" என்று கணேசன் கதவைச் சாத்தி விட்டுப் போனான்.

காஸெட், ரெக்கார்டரில் மெல்ல சுழன்றது. ஒவ்வொரு நாளும் இது ரவிக்குமாருக்கு ஒரு த்ரில்.

இன்றைக்கு என்ன காஸெட் ஒலிக்கப் போகிறது? கே.பி.சுந்தராம்பாளா இல்லை, வாணி ஜெயராமா? இளையராஜாவா?

அந்த சஸ்பென்ஸை ரசித்து அவர் ஆவலோடு உட்கார்ந்திருந்தபோது முதலில் உஸ்ஸ் என்ற காற்றின் சத்தம் தான் வந்தது.

அப்புறம், தெளிவான கணீரென்ற பெண் குரல் ச்ரேலென ஆரம்பித்தது.

"வணக்கம் ரவிகுமார் சார்"

"இந்த கேஸட்டை நீங்க எப்ப கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியாது. நான் வச்சிட்டுப் போன மறுநாளே கேக்கலாம் அல்லது முப்பது வருஷம் கழிச்சு கூட கேக்கலாம்"

ரவிகுமார் ஈஸிசேரிலிருந்து எழுந்து விட்டார்.

இந்தக் குரல், இந்தக் குரல் அவருக்கு வெகு பரிச்சயமான குரல்.

*சபிதாவின் குரல்!*

*சபிதா!*

எப்போது கொண்டு வந்து வைத்தாள் இந்த காஸெட்டை? புருவங்களை சற்று நெறித்து யோசித்ததும், நினைவுக்கு வந்தது.

*1985!*

பதினைந்து வருடங்களுக்கு முன் ஒருநாள் திடீரென்று சில காஸெட்களைக் கொண்டு வந்து அவருடைய கலெக்ஷனுடன் கலந்து விட்டாள். கலந்து விட்டு அவள் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

"நான் கொண்டு வந்த கேஸட்டுகள் எது என்று நான் சொல்லப் போவது இல்லை. நீங்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு கேஸட்டைத் தொடும்போது, என்றைக் காவது நான் வைத்த கேஸட்களைக் கேட்காமலா போய் விடுவீர்கள்?"

அவள் கலந்து வைத்து விட்டுப் போனதில் வேறு எந்தெந்த கேஸட்களையோ அவர் போட்டுக் கேட்டு விட்டார். ஆனால் அதில் எல்லாம் இசைதான் இருந்தது.

சபிதா தன் குரலில் பேசிய இந்தக் காஸெட்டைப் போட்டுக் கேட்க, பதினைந்து வருடங்கள் கடந்து இன்றைக்குத்தான் வாய்ப்பு வந்திருக்கிறது என்பதே அவருக்கு சற்று ஆச்சரியமாக இருந்தது. டேப்பை முதலிலிருந்து கேட்க விரும்பினார்.

சாய்வு நாற்காலியை அருகில் இழுத்துப்



போட்டுக் கொண்டு ஸ்பீக்கர்களில் ததும்பும் அவளுடைய குரலை உன்னிப்பாகக் கேட்க ஆரம்பித்தார்.

"வணக்கம் ரவிகுமார் சார்"

"இந்த கேஸட்டை நீங்க எப்ப கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியாது. நான் வச்சிட்டுப் போன மறுநாளே கேக்கலாம். இல்ல முப்பது வருஷம் கழிச்சு கூட கேக்கலாம்.

நீங்க உடனே கேட்டாலும் சரி... ரொம்ப காலம் கழிச்சு கேட்டாலும் சரி... என் மனசில இருக்கற பாரத்தையெல்லாம் நான் இன்னிக்கே உங்ககிட்ட எறக்கி வச்சிர ணும்னு தான் இந்த கேஸட்ல எல்லாத்தையும் பதிவு செய்யறேன்..

நடந்ததை நடந்தபடி உங்ககிட்ட மட்டும்தான் சொல்லப் போறேன்றதால, இந்த டேப்பைக் கேக்கும்போது கொஞ்சம் அமைதியான சூழ்நிலைல கேளுங்க...

சொல்லட்டுமா?

சபிதாவின் குரல் ரவிகுமாரை பதி னைந்து வருடங்கள் பின்னோக்கி இழுத்துச் சென்றது.




"உங்கள் பெயர்?"

"அபிராமி"

"சற்று உரக்க பதில் சொல்லுங்கள்.

நீதிபதியின் காதில் விழுகிற மாதிரி பேசினால் தான் விசாரணைக்கு அர்த்தம் கிடைக்கும்."

"அபிராமி"

"குட். வயது"

"இருபத்தியொன்று"

"அபிராமி, ஒரு விஷயத்தை கவனியுங்கள்... உங்களை விசாரிக்கும் நானும் ஒரு பெண்தான். உண்மைகளை மட்டும் பேசுவதனால் பயம் வேண்டாம்... பதுங்கிப் பதுங்கி பதில் சொல்ல வேண்டாம்... தைரியமாக தலை நிமிர்ந்து பேசுங்கள்... கண்களில் கண்ணீர் எதற்கு?"

"எனக்கு அழுகை வருகிறது"

"அழுது முடித்துவிட்டு பதில் சொல்லுங்கள். உங்கள் தொழில் என்ன?"

"பட்டப்படிப்பை முடித்து விட்டு ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டிருக்கிறேன்..."

"குட்! படித்த பெண் இப்படி பயப்படலாமா?"

"........"

"அதோ அந்தக் கூண்டில் நிற்கிறாரே... என் கட்சிக்காரர். அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"எப்படி?"

"மே மாதம் ஹோட்டல் ஈஷ்வரில் நான் தங்கியிருந்தபோது முதல் சந்திப்பு நிகழ்ந்தது."

"அப்படியானால் அதற்கப்புறம் அடிக்கடி சந்தித்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாமா?"



"அப்ஜக்ஷன் யுவர் ஆனர், எதிர்க்கட்சி வக்கீலின் கேள்வியில் என் கட்சிக்காரரை சீண்டும விஷமத்தனம் இருக்கிறது."

"யூகங்களைக் கேள்விகளாக மாற்றாமல், நேரடியான கேள்விகளை மட்டுமே குறுக்கு விசாரணையில் பயன்படுத்த வேண்டும் என்று சபிதா அவர்கள் கோர்ட்டில் கேட்டுக் கொள்ளப்படுகிறார்..."

"யெஸ்... யுவர் ஆனர்... அபிராமி... என் கட்சிக்காரருடன் நேர்ந்த சந்திப்பு பற்றி சொல்லுங்கள்."

"மே மாதம் திருச்சியில் என் ஆராய்ச்சிப் படிப்பு தொடர்பான ஒரு செமினார் ஹோட்டல் ஈஷ்வரில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நான் தனியே சென்றிருந்தேன். அறை எண் 222-ல் தங்கியிருந்தேன். ஒரு முறை லிப்டைப் பயன்படுத்தியபோது, நான் முழுமையாக லிப்டிற்குள் போவதற்கு முன் அதன் ஆட்டமாடிக் கதவுகள் மூடிக் கொண்டன. என் புடவை முந்தானை லிப்டின் இரட்டைக் கதவுகளுக்கிடையே சிக்கிக் கொண்டது. அதை விடுவிக்கும் முன் லிப்ட் இயங்கி, மேலே ஏறத் தொடங்கியது. அதனால் என் புடவை இழுக்கப்பட்டு அவிழ்ந்து என்னை சுழற்றியது. அப்போது லிப்டினுள் இருந்த ஒரே ஆள் இதோ இங்கே நிற்கிறானே..."

"மரியாதை..."

"இங்கே நிற்கிறாரே திருவாளர்

அமுதன்! அவர் மட்டும்தான். சுழற்றப் பட்ட வேகத்தில் அவர் மீது நான் மோதினேன். அவர் உடனே செயல் பட்டு லிப்டை அணைத்து விட்டார். புடவை அவிழ்ந்த நிலையில் நான் குறுகி நின்றேன். அமுதன் என் புடவையை லிப்டின் கதவிலிருந்து உருவி இழுத்து என்னிடம் தந்தார்"

"புடவையை முழுவதுமாக இழுக்க முடிந்ததா?"

"இல்லை... அதன் முந்தானைப் பகுதியை அவரிடமிருந்த சிறு கத்தியால் கிழித்து விட்டு புடவையை என்னிடம் தந்தார்"

"புடவையை நீங்கள் அங்கேயே கட்டிக் கொண்டீர்கள்!"

"ஆமாம்"

"அப்போது அமுதன் என்ன செய்தார்?"

"நல்ல பிள்ளை போல் கதவைப் பார்த்து திரும்பி நின்றார். புடவையை நான் சுற்றிக் கொண்டதும், லிப்டை இயக்கித் திறந்து, முந்தானைப் பகுதியையும் எடுத்து என்னிடம் கொடுத்தார்.

"நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"அவர் செயலால் நெகிழ்ந்து போய் நன்றி சொன்னேன். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவரும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்."

"என்னவென்று?"

"பெயர் அமுதன் என்றார். சென்னையில் ஒரு தனியார் கம்ப்யூட்டர் நிறுவனத்தை



நடத்துவதாகச் சொன்னார். தன்னுடைய விசிட்டிங் கார்டை என்னிடம் தந்தார். இரண்டாவது மாடியில் லிப்ட் நின்றது. என்னுடன் அவரும் வெளியே வந்தார். என் அறைக்கு நேர் எதிரில் இருக்கும் அறை எண் 224-ல் தங்கியிருப்பதாகச் சொன்னார். முதல் சந்திப்பில் அவ்வளவுதான் நடந்தது".

"இரண்டாவது சந்திப்பு?"

"இரண்டாவது சந்திப்பு சற்று தர்ம சங்கடமான சந்திப்பாக நிகழ்ந்தது. செமினாரில் கலந்து கொள்வதற்காக உடுத்திக் கொண்டு நான் அறைக்கதவைத் திறந்த போது, முட்டிக் கொள்வது போல் அமுதன் நின்றிருந்தார். ஒரு கணம் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் முகமும் பேயறைந்தது போல் ஒரு கணம் மாறிவிட்டது. கதவில் இருந்த சாவித்துவாரம் வழியாக அவர் நான் உடுத்திக் கொள்வதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு சொல்லியது."

"உள்ளுணர்வு சொன்னது மட்டும் தானா? அல்லது சாவித்துவாரம் வழியே அவர் பார்த்துக் கொண்டிருந்ததை நீங்க கவனித் தீர்களா?"

"அவர் கதவுக்கு அவ்வளவு நெருக்கமாக நின்றிருந்தது என்னை அப்படித்தான் யோசிக்க வைத்தது"

"கதவருகில் அமுதன் ஏன் நின்றிருந்தார் என்று நீங்கள் கேட்கவில்லையா?"

"நான் கேட்காமல் அவரே சொன்னார்."

"என்னவென்று?"

"கதவைத் தட்டுவதற்காக நான் கையை ஓங்கினேன். நீங்கள் மிகச் சரியாக திறந்து விட்டீர்களே என்றார். நூறு ரூபாய்க்கு சில்லறை இருக்குமா என்று நூறு ரூபாய் நோட்டை நீட்டினார். உள்ளே போய் என் பர்ஸ் திறந்து சில்லறை எடுத்துக் கொடுத்தேன். அப்பொழுது பேச்சுக் கொடுத்தார். என் செமினார் பற்றிக் கேட்டார். பறவைகளின் பழக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாக நான் சொன்னதும், ஈஸிட் என்று வியப்பு காட்டினார். மதுராந்தகம் அருகில் தான் ஒரு பறவைகள் சரணாலயம் வைத்திருப்பதாகச் சொன்னார். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் அங்கே வந்து பறவைகளோடு இருக்கலாம் என்றார். அப்படி எந்த பறவைச் சரணாலயமும் அவர் வைத்திருக்கவில்லை என்று எனக்கு அப்போது தெரியாது. பறவைகள் மீது அவருக்கும் ஈடுபாடு இருப்பதாக அவர் சொன்னதை நான் நம்பிவிட்டேன்.!"

"நம்பி?"

"செமினார் முடிந்ததும் அவரோடு ஒரு காஃபி அருந்த ஒப்புக் கொண்டேன்."

"நீங்கள்தானே அவரை காஃபிக்கு அழைத்தீர்கள், அபிராமி?"

"அப்படித்தான் அவர் இங்கே தன் வாக்குமூலத்தில் சொன்னார். உண்மை அதுவல்ல... அவர்தான் என்னை அழைத்தார்"

"அழைத்தாரா, வற்புறுத்தினாரா?"



"அழைத்தார், லிப்டில் அவர் எனக்கு செய்த உதவியின் காரணமாக ஏற்கெனவே அவர் பேரில் எனக்குக் கொஞ்சம் மரியாதை இருந்தது. பறவைகள் பற்றி அவர் ஆர்வமாகச் சொன்னதும், எனக்கு அந்த மரியாதை அதிகமானது. அதனால் காஃபிக்கு ஒத்துக் கொண்டேன்."

"அது மூன்றாவது சந்திப்பு?"

"ஆமாம்"

"காஃபிக்கு எங்கே போனீர்கள்?"

"ஹோட்டல் ஈஷ்வரிலேயே இருக்கும் ரெஸ்ட்டாரண்டில் சந்தித்தோம். காஃபி குடித்தோம். அதன் பின் அமுதன் தனக்கு வேலை இருப்பதாகப் புறப்பட்டுப் போனார்."

"ரெஸ்ட்டாரன்ட்டில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள்?"

"சுமார் நாற்பது நிமிடங்கள்"

"ஒரு காப்பி குடிக்க நாற்பது நிமிடங்களா?"

"சற்று நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம். அமுதன் நிறைய ஜோக்குகளை இயல்பாகச் சொன்னார்... சுவாரஸ்யமாகப் பேசினார்... அவர் காஃபி குடித்தார். நான் ஐஸ்க்ரீம் சாப்பிட்டேன்"

"முதலில் விடைபெற்றுப் புறப்பட்டது நீங்களா, அவரா?"

"நினைவில்லை"

"நன்றாக யோசித்து சொல்லுங்கள்"

"அமுதன்தான்... தனக்கு ஏதோ வேலை

இருப்பதாகச் சொல்வி பில்லை வரவழைத்து பணத்தை செட்டில் பண்ணிவிட்டுப் போனார்."

"அதற்கடுத்த சந்திப்பு?"

"ம்ஹ்ஹ்ம்... ம்ஹ்ஹ்ஹா... ம்ம்ம்..."

"மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டீர் கள். அழுது முடித்து விட்டு சொல்லுங்கள்"

"அன்றிரவு டின்னர் முடித்து விட்டு நான் அறைக்குத் திரும்பியபோது தன் வாசலில் அமுதன் நின்றிருந்தார்"

"குறுக்கிடுவதற்கு மன்னியுங்கள். தேதி, நேரம் எல்லாம் நினைவிருக்கிறதா?"

"மே பன்னிரண்டு, இரவு பத்து மணி இருக்கும்..."

"ம்?"

"அறை வாசலில் நின்றிருந்த அமுதன் ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா என்று கேட்டார். அவருடைய பெட்டி சாவியை எங்கேயோ தவர விட்டு விட்டதாகவும், என் வி.ஐ.பி. சூட்கேஸ் சாவி அந்தப் பெட்டிக்குப் பொருந்துகிறதா என்று பார்க்க விரும்பு வதாகவும் சொன்னார். நான் என்பர்ஸில் இருந்து பெட்டி சாவியை எடுத்துக் கொடுத்தேன். அவர் அறைக்கதவு திறந்து இருந்தது. கட்டில் மீது ஒரு வி.ஐ.பி. பெட்டி இருந்தது. நான் கொடுத்த சாவியை அதில் பொருத்தி திருகினார். அங்கிருந்த என்னைப் பார்த்து 'உள்ளே வர முடியுமா? இந்த மூடியை அழுத்திக் கொண்டீர் களானால், திறந்து விடுவேன்" என்றார். வெகு இயல்பாக



கேட்கப்பட்ட உதவி என்பதால உள்ளே போனேன். இரண்டு கைகளாலும் பெட்டி யின் மேற்புறத்தை... ம்ஹூம்..."

"உணர்ச்சிகளைச் சேர்த்து சேர்த்து சொல்வதால் உங்கள் மேல் இரக்கம் வரும் என்று 'நினைக்காதீர்கள், அபிராமி... நடந் ததை நடந்த படி... அழாமல் சொல்லுங்கள்."

"அப்ஜெக்ஷன் யுவர் ஆனர்... அபிராமி இயல்பாகவே ரொம்ப உணர்ச்சி வசப் படுவார். அவர் கண்ணீரை நாடகம் என்பது போல் எதிர்க்கட்சி வக்கீல் சபிதா திரித்துக் கூறுவது நியாயமற்றது. அபிராமிக்கு அந்த இரவு நடந்த கொடுமை பற்றித் தெரிந் திருந்தும், தானும் ஒருபெண் என்பதை மறந்து வக்கீல் சபிதா இரக்கமற்ற வார்த்தை களைக் கூறுவதைக் கோர்ட்டார் கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்..."

"மிஸ் சபிதா... கண்ணீரைப் பார்த்து இரக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதை உணர்ந்து கொள்ளும் அளவிற்கு இந்த கோர்ட் நீதிபதிக்கும் பக்குவம் இருக்கும் என்பதில் உங்களுக்கு சந்தேகம் இருக்கிறதா?"

"அப்படி அர்த்தம் வரும்படி நான் கூறியிருந்தால் உடனே மன்னிப்புக் கோரு கிறேன் யுவர் ஆனர். நீதிக்கு முன் ஆண், பெண் என்ற பேதம் இருக்காது என்பதை இந்தப் பெண்ணிற்கு எடுத்துச் சொல்வதற் காகத் தான்..."

"நேரிடையான கேள்விகளோடு மட் டும் விசாரணையைத் தொடர்ந்தால்

போதும்."

"எஸ் யுவர் ஆனர்! அபிராமி, பெட்டி மூடியை அழுத்திக் கொள்ள அமுதன் கூப்பிட்டதாக சொன்னீர்கள்..."

"ஆமாம்... அவர் அறைக்குப் போய் பெட்டியின் மேற்புறத்தை இரு கைகளாலும் அழுத்திக் குனிந்து நின்றேன்... அமுதன் சடாரென நிமிர்ந்து என் உதடுகளில் தன் உதடுகளால் முத்தமிட்டார். திடுக்கிட்டேன். அப்படியே அதிர்ந்து என் கையைப் பெட்டியிலிருந்து எடுத்தேன். பளாரென்று அவர் கன்னத்தில் அறைந்தேன். அறைந்த கையை அப்படியே தன் இடது கையில் பற்றினார் அமுதன். காலை நீட்டி திறந்திருந்த அறைக் கதவைத் தள்ளிவிட்டார். மூடியதும் கதவு தானாக பூட்டிக் கொண்டது... அதன்பின் அமுதன் ஒரு மிருகம் போல் நடந்து கொண்டார்... கெஞ்சினேன்... அழுதேன்... எதற்கும் அ ஷர் மசியவே இல்லை..."

"அமுதன் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்திருந்தால் நீங்கள் கூச்சலிட்டிருப்பீர்கள் அல்லவா...!"

"அமுதன் என் வாயை தன் கையால் அழுத்தி மூடிவிட்டார்... அவருடைய பலத்திற்கு எதிராக நான் போராடியும் பலனில்லாமல் போனது. பயத்தில் நான் மயக்கமாகியிருந்தேன். மயக்கம் தெளிந்த போது என் மீது அமுதன் படுத்திருந்ததை உணர்ந்து அவரை நெம்பித்தள்ளி விட்டு எழுந்தேன். என் உடைகளை அள்ளிக் கொண்டு என் அறைக்கு ஓடினேன். நிறைய நேரம் அழுதேன். எனக்குஇரண்டு



வாய்ப்புகள் இருந்தன. நடந்ததை யாரிடமும் சொல்லா மல் எனக்குள் புதைத்துக் கொள்வது... அல்லது உடனடியாக போலீஸில் புகார் கொடுப்பது. அமுதன் தண்டிக்கப்படாமல் விடப்படக் கூடாது என்று எனக்கு ஒரு ஆவேசம் வந்தது. போலீஸிற்கு போன் செய்தேன்.

"அமுதன் என்ன செய்தார்?"

"அவர் தன் அறையை விட்டு வெளியே வரவே இல்லை. போலீஸ் வரும்வரை"

"போலீஸிடம் குற்றச்சாட டை நிரூபித்தீர்களா?"

"நடந்ததை நடந்தபடி சொன்னேன்."

"போலீஸில் நீங்கள் கொடுத்த வாக்கு மூலத்தில் முன்னுக்குப்பின் முரணாக நிறைய விஷயங்களை சொல்லியிருப்பதைப் பற்றி ந ஏற்கெனவே பேசி விட்டோம்"

"முன்னுக்குப் பின் முரணாக நான் சொல்லியிருக்கலாம். அன்று அந்த அளவு நான் அதிர்ச்சியில் நிலையிழந்திருந்தேன். ஒரு பலவீனமான சந்தர்ப்பத்தில் ஹோட்டல் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளலாமா என்று கூட ம்ஹ்ஹ்ஹ்ம்... நினைத்தேன்... ம்ஹ்ஹஹ்ஹ்ம்... கண்ணியமான என் குடும்பத்தில் ஒரு தீட்டு போல எனக்கு நேர்ந்த விபத்து பற்றி நான் உள்ளுக்குள் மறுகிப் போனேன்."

"போலீஸில் அமுதனை விசாரித்த போது நீங்களும் உடன் இருந்தீர்களா?"

"இருந்தேன்... அமுதன், கதையை அப்படியே தலைகீழாக மாற்றிப் பேசினார்.

நானாகத்தான் அவரைத் தேடிப் போனதாக வும், கட்டிபிடித்ததாகவும், கிஸ் அடித்ததாக வும் நாக்கில் நரம்பின்றி பொய் சொன்னார்.”

“யார் சொல்வது பொய்? இத்தனை நேரம் நீங்கள் சொன்னதா? இல்லை, உங்கள் வலையில் பரிதாபமாக விழுந்து மாட்டிக் கொண்ட அமுதன் சொன்னதா?”

“நான் சொன்னது அத்தனையும் உண்மை, உண்மை, உண்மை”

“கோர்ட்டில் கத்தக் கூடாது...”

“விசாரணை மதிய உணவு இடை வேளைக்குப் பிறகு மீண்டும் தொடரும்... இப்பொழுது கோர்ட் உணவு நேரத்திற்காக கலைகிறது...”




அபிராமியின் கண்கள் வெகுவாக சிவந்திருந்தன. தேய்த்துத் தேய்த்து மூக்கு நுனி பழுத்திருந்தது.

சாட்சிக் கூண்டியிலிருந்து இறங்கும் போது விழுந்து விடாமல் இருப்பதற்காக தன் அம்மாவைப் பிடித்துக் கொண்டாள்.

அவள் அம்மா அபிராமியை அப்படியே தன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

முதுகில் தட்டிக் கொடுத்து அணைத்து கோர்ட் அறைக்கு வெளியே நடத்திப்



போனாள்.

அவள் தரப்பு வக்கீள் தன் கறுப்புக் கோட்டைத் தளாத்திய படி வந்து சேர்ந்து கொண்டார்.

“அம்மா அபிராமி... இவ்வளவு நாள் தைரியமாக இருந்து விட்டாய். இப்போது போய் இப்படி உடைந்து போகலாமா?”

வக்கீல் அவளுக்கு மூத்த அண்ணன் போல் இருந்தார். கண்களில் கருணையும், வார்த்தைகளில் கரிசனமும் வழிந்தன.

“எத்தனை தடவை அதே கேள்வி களைக் கேட்டுக் கேட்டு என் குழந்தையை அவ மானப்படுத்துகிறார்கள்!” அபிராமியின் அம்மா சூடானாள்.

“இதற்கு பயந்துதானம்மா பாதி பெண் குழந்தைகள் போலீஸ்வரை வருவதே இல்லை... ஆனால் திமிர் பிடித்த அமுதனை அப்படி விடக்கூடாது. அபிராமியின் தைரி யத்தை நான் ரொம்ப பாராட்டுகிறேன்.”

“அந்த அமுதனுக்காக வாதாடுகிறாளே... அவளுக்குகூட இருபத்தைந்து இருபத்தாறு வயதுதானே இருக்கும்? ஒரு பெண்ணாக இருந்து கொண்டு எப்படித்தான் அவளால் அபிராமியைப் பந்தாட முடிகிறதோ?”

“தொழில் அம்மா! அந்தப் பெண் ரொம்ப சூட்டிகையான பெண். ரங்காச்சாரியாரின் ஜூனியராக இருந்தது. அபாரமாக வரப்போகிறது.”

“கேஸ் என்ன ஆகும்?”

“என்றைக்கும் தர்மம்தான் ஜெயிக்கும், அம்மா...”

* * *

அமுதன் கைக்குட்டையால் தன் முகத்தை துடைத்துக் கொண்டான்.

"அந்தப் பெண் முணுக் முணுகென்றால் அழுது விடுகிறதே! அதைப் பார்த்து ஜட்ஜின் மனம் மாறி விடுமா?"

என்றபோது அவன் குரலில் மெல்லிய கவலை இழையோடியது.

சபிதா அவனை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள்.

பார்த்தால், கதாநாயகன் போல் உயர மாக, கம்பீரமாக அழகாக இருக்கிறான். ஆனால், பயப்படும் போது கோழைத்தனம் அசிங்கமாக இருக்கிறது.

"வழக்கு முடியட்டும்..." என்றாள் சபிதா, புன்னகை மாறாமல்.

"ஏதாவது அபராதம் போட்டால் கூட கட்டி விடுவேன்... ஆனால், சிறைத் தண் டனை அது இது என்று அசிங்கப் படுத்திவிட மாட்டார்களே?"

அமுதன் தன் தங்க வாட்சை கையில் முன்னும் பின்னுமாக நகர்த்திக் கொண்டே கேட்டான்.

"அபராதம் கட்டச் சொல்லித் தீர்ப்பா னால் கூட, நீங்கள் குற்றம் செய்தவர் என்று கோர்ட் கருதுவதாக ஆகிவிடும். நீங்கள் ரேப் செய்தீர்களா, என்ன?"

"ஐய்யயோ! நான் அந்த மாதிரி தவறுகள் செய்பவன் இல்லை! நடந்ததைத் தான் நான் உங்களிடம் சொன்னேன்"



"செய்யாத குற்றத்திற்கு உங்களுக்கு தண்டனைக் கிடைக்காது. கவலைப் படாதீர்கள். அந்தப் பெண்ணின் வாயாலேயே இயல்பாக சில வார்த்தைகளை வரவழைத் திருக்கிறேன். அதை நான் எப்படிப் பயன் படுத்தப் போகிறேன் என்பதைப் பாருங்கள்! உங்களை கோர்ட்டு இழுத்து வம்பு பண்ணிய தற்காக அவர்களிடமிருந்து நஷ்டஈடு கேட்டுக் கூட என்னால் வாதிட முடியும்..."

"வேண்டாம், வேண்டாம்!" அமுதன் அவசரமாக தலையசைத்து அதை மறுத்தான். "அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்? இந்த வழக்கில் இருந்து என்னை வெளியே கொண்டு வந்து விடுங்கள் போதும்."

"நீதிபதி உங்களை குறுக்கு விசாரணை செய்தால், தைரியமாக உண்மைகளை சொல்லுங்கள், அமுதன்..."

"சரி..."

"அபிராமியின் வக்கீல் அவளுக்கு பாடம் நடத்தி அனுப்புகிறார்.. அதனால் அவளை மடக்கித் திணறடிப்பது எனக்கு கஷ்டமாய் இ..."




"கனம் நீதிபதியவர்களே... இந்த வழக்கில் பல்வேறு சாட்சிகளை விசாரித்து

முடித்த நிலையில், விசாரணைகளின் மூலம் இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வந்துள்ள சில உண்மைகளை இங்கே தொகுத்தளிப்பது தீர்ப்பு வழங்க உபயோகமாக இருக்கும் என்று கருதுகிறேன்...

முதலாவதாக என் கட்சிக் காரரர் திரு.அமுதன் இந்த சமூகத்தில் ஒருமேன்மையான அந்தஸ்து உள்ளவர்... பொறுப்பான பதவியில் உள்ளவர். இதற்கு முன் போக்குவரத்து விதிகளை மீறியதாகக் கூட அவர் பேரில் எந்தக் குற்றமும் பதிவு செய்யப்பட்டதில்லை...

அமுதன் இளைஞர், பணக்காரரர், பார்ப்பதற்கு வசீகரமாய் இருப்பவர். கடந்த மே மாதம் திருச்சி ஈஷ்வர் ஹோட்டலில் தன் பிஸினஸ் விஷயமாக இவர் சில நாட்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது எதிர் அறையில், இங்கு வாதியாக இருக்கும் அபிராமி தங்கியிருந்தார். அபிராமிக்கு, அமுதன் பேரில் ஒரு ஈடுபாடு வந்திருக்கிறது.

அபிராமியும் இளமையானவர், எந்த ஆணையும் வசீகரிக்கக்கூடிய அழகு கொண்டவர். எனவே, அமுதனைக் கவர்வது அவருக்குக் கஷ்டமான காரியம் இல்லை.

சம்பவம் நடந்த மே பன்னிரண்டாம் தேதி இரவு அபிராமி அமுதனைத் தேடி அவர் அறைக்குப் போனார். செமினார் பற்றி பேச ஆரம்பித்து எங்கெங்கோ பயணம் செய்து சற்று பர்ஸனலான விஷயங்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவிற்கு நெருக்கமாகி விட்டது என்று அமுதன் தன் சாட்சியத்தில் சொன்னதை இங்கு நினைவு கூர்கிறேன்



அபிராமி சில வரம்பு மீறிய ஜோக்குகளைச் சொன்ன போது, அமுதன் அதிர்ந்து போனார். ஆணும், ஆணும் பேசலாம், பெண்ணும், பெண்ணும் பேசலாம். ஆனால் சற்று கீழ்த்தரமான பாலியல் ஜோக்குகளை ஒரு பெண் ஆணிடம் இரவு நேரத்தில்தான் படுக்கையில் உட்கார்ந்து சொன்னால், என்ன அர்த்தம் எடுத்துக் கொள்வது?

அபிராமி அமர்ந்திருந்த விதம், அடிக்கடி முந்தானையை சரிய விட்டது, அமுதனின் தொடையில் தட்டி சிரித்தது எல்லாமாகச் சேர்ந்து அபிராமி பற்றி எந்த அபிப்பிராயத்தை அமுதனுக்கு கொடுத்திருக்கும் என்று யோசியுங்கள்...

அதனால் அபிராமி அமுதனின் மடியில் தலை வைத்துப் படுத்தபோதும், அவரை இழுத்து முத்தமிட்ட போதும், எந்த ஒரு சராசரி இளைஞனுக்கும் ஏற்படக் கூடிய சலனம்தான் அமுதனுக்கும் ஏற்பட்டது. அழகான ஒரு பெண் தன்னை வலியக் கொண்டு வந்து ஒப்படைத்தால், அவளை அனுபவிக்காமல் இருக்க அந்த ஆண் உண்மையான சாமியாராக இருக்க வேண்டும் அல்லது ஒன்றுக்கும் உதவாதவனாக இருக்க வேண்டும். என் கட்சிக்காரரர் இரண்டு வகையும் அல்ல. அவர் ஒரு சராசரி ஆண்மகன்...

என் கட்சிக்காரரர் அபிராமியைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார். இன்பமாக இருந்து முடிந்ததும், அவளுடைய சுய ரூபத்தை அவள் காட்டினாள். தன்னைத் திருமணம் செய்து கொள்வதாக உடனே ஒரு

ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுத்தர வேண்டும் என்று அமுதனை மிரட்டினாள். மறுத்தால் அவரை சந்தி சிரிக்க வைத்து விடுவதாக பிளாக் மெயில் செய்தாள்.

அபிராமி அறிவாளி, புத்திசாலி. அத்தனைப் பாடங்களிலும் முதன்மையாக வந்த மாணவி. ஆனால், அவள் பின்னணியை சற்று கவனியுங்கள். பட்டப்படிப்பு, மேல் படிப்பு எல்லாமே ஸ்காலர்ஷிப்பில்தான் படித்திருக்கிறாள். திறமையானவளாக இருந்தாலும், ஏழையாகவே இருந்திருக் கிறாள். வசதியாக இருக்க வேண்டும் என்ற கனவு அவளுக்கு இயல்பாகவே வளர்ந்து விட்டது.

அமுதன் போன்ற வசதியான ஒரு ஆள் கிடைத்தால், அவரை மடக்கி வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ளலாமே என்று அவளுக்குத் தோன்றியதில் ஆச்சரியமில்லை. ஆனால், என் கட்சிக்காரர் அமுதனுக்கு அதைப் போன்ற அவசர முடிவை எடுக்க விருப்பமில்லை. அபிராமியின் மிரட்டலுக்கு அதனாலேயே அமுதன் பயப்படவில்லை.

அபிராமி அமுதன் தன்னை பலாத்காரம் செய்ததாக போலீஸில் பொய்யாக குற்றம் சாட்டி அவரை இந்த வழக்கிற்கு இழுத் துள்ளார். அமுதன் தன் சமூக கௌரவம் கருதி பெரிய தொகையாக நஷ்டஈடு தரமாட்டாரா என்ற நப்பாசை இதற்குக் காரணமாக இருக்கலாம்...

என் கட்சிக்காரர் அமுதன் குற்றமற்றவர் என்பதற்கு அபிராமி வாயாலேயே சொன்ன



சில வார்த்தைகளை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்...

முதலாவதாக, அமுதன் பெண் சபலம் உள்ளவராக இருந்திருந்தால் லிப்டில் என்ன நடந்திருக்கும்? தனிமையில், மூடப்பட்ட லிப்டினுள் அழகான இளம் பெண் புடவை உரிக்கப்பட்டு ரவிக்கையும், பாவாடையுமாக அவர் மீது வந்து மோதியபோது அவர் எப்படி நடந்து கொண்டிருப்பார்?

அமுதன் நினைத்திருந்தால், லிப்டைத் திறக்க எந்த முயற்சியும் செய்யாமல் அபிராமியின் அந்தக் கோலத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டேயிருந்திருக்கலாம். அப் படிச் செய்தாரா? இல்லை! முந்தானையைக் கிழித்தாவது முதலில் அபிராமி தன் உடலை மூடிக் கொள்ள புடவையைக் கொடுத்தார்.

லிப்ட் திறக்கும்போது அரைகுறை உடையுடன் அபிராமி இருக்கக்கூடாது என்பதற்காகத்தானே அவர் அப்படி நடந்து கொண்டார்? அதன் பின் தானே லிப்ட்டை இயக்கித் திறந்தார்? அபிராமி புடவை உடுத்திக் கொள்ளும்போது கூட கண்ணிய மாக வேறு புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டார் என்று அபிராமியே தன் வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார்.

அமுதன் பெண்களுக்கும், அவர்களது கௌரவத்திற்கும் எவ்வளவு மதிப்பளிப்பவர் என்பது லிப்ட் சமாச்சாரத்திலேயே தெரிந் திருக்கும்.

இரண்டாவதாக சந்தித்தபோது நூறு ரூபாய்க்கு சில்லறை வாங்கி வந்ததைக்கூட

சாவித் துவாரம் வழியாகப் பார்த்து கொண்டிருக்கலாம் என்று கற்பனை செய்தது அபிராமிதான். அவ்வளவு பெரிய ஹோட்டலில், காரிடரில் யார் வேண்டு மானாலும், எந்த நேரம் வேண்டுமானாலும் வந்து விடக் கூடிய சூழ்நிலையில், சமூகத்தில் பெரும் அந்தஸ்தும், பெயரும் உள்ள ஒரு ஆண்மகன் சாவித் துவாரம் மூலம் பார்க்கும் கேவலமான செயலில் ஈடுபடுவாரா? அவரிடம் இருக்கும் பணத்திற்கு மயங்கி உடலைக் காட்ட பெண்கள் கிடைக்காமலா போய் விடுவார்கள். சாவித்துவாரம் வழியே பார்க்கும் அளவிற்கு கீழ்த்தரமாக நடந்து கொள்ள?

அமுதன் சாவித் துவாரம் வழியே பார்த்தார் என்று நிரூபிக்கப்படவில்லை. அது அபிராமியின் யூகம் என்றுதான் சொல்லப் பட்டிருக்கிறது.

அபிராமியிடம் தீவறாக நடந்து கொள்ளும் எண்ணம் இருந்திருந்தால், அமுதன் தன்னைப் பற்றி பொய்யாக சொல்லி அவளை திசை திருப்பத்தானே முயற்சி செய்திருப்பார்? ஆனால் உண்மையில் நடந்தது என்ன? அமுதன்தான் விசிட்டிங் கார்டை அவளிடம் கொடுத்திருக்கிறார்.

அதற்கப்புறம் ஒரு காஃபி சாப்பிடலாம் என்று அமுதன் கூப்பிட்டிருந்தாலும், அபிராமி கூப்பிட்டிருந்தாலும் அது இயல் பானதுதான். அமுதன் அபிராமியை காப் பிக்கு வந்தே ஆக வேண்டும் என்று வற் புறுத்தவில்லை. அபிராமிதானே விரும்பி இணைந்து காப்பி குடிக்கப் போயிருக்கிறார்?



அங்கிருந்து முதலில் புறப்பட்டது அமுதன் தான்!

ரெஸ்ட்டாரண்டில் சந்தித்து அவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த சாட்சிகள் என்ன சொன்னார்கள்? அபிராமி சிரித்து சிரித்து பேசினார் என்றுதானே? அமுதனுக்கு பறவைகள் சரணாலயம் எதுவும் சொந்தமாகக் கிடையாது. அப்படி இருப்ப தாக அவர் சொன்னதற்கான அத்தாட்சியும் இல்லை. பறவைகள் சரணாலயம் இருப்ப தாக நம்பினேன் என்று அபிராமி சொன் னாள் அது முழுக்க முழுக்க அவளே கற் பனையாக ஏற்படுத்திக் கொண்ட நம்பிக்கை!

மே பன்னிரெண்டாம் தேதி இரவு அமுதனைத் தேடி வந்தது அபிராமி. அமுத னிடம் ஒரு வி.ஐ.பி. சூட்கேஸ் இருப்பதை கவனித்து விட்ட அபிராமி, அதற்கான சாவி கேட்டு உள்ளே அழைத்தார் என்று கட்டுக் கதை கட்டி விட்டார்.

இரவு நேரத்தில் தனிமையில் இருக்கும் ஒரு ஆணின் அறைக்குள் எந்தப் பெண்ணும் சாவி கொடுப்பதற்காகப் போனதாக சொன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

பெட்டியை அழுத்திப்பிடித்தபோது அமுதன் உதடுகளில் முத்த மிட்டதாகவும், அவர் கன்னத்தில் அறைந்ததாகவும் அபிராமி சொல்லியிருக்கிறார். அறைந்து விட்டு அங்கே ஏன் நிற்க வேண்டும்? வெளியே ஓடி வந்திருக்கலாமே!

அப்படியே நடக்காமல், பலாத்கார முயற்சி நடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்.

யுவர் ஆனர்? இருவருக்கும் இடையில் போராட்டம் நடந்திருக்கும். நாற்காலி கவிழ்ந்திருக்கும். தண்ணீர் கூஜா உருண்டிருக்கும். குறைந்த பட்சம் கட்டிலிலிருந்து தலையணைகளாவது கீழே விழுந்திருக்கும். போலீஸ் வருவதற்குள் இதையெல்லம் அமுதன் சரி செய்திருக்கலாம் என்று ஒரு வாதத்திற்காக ஒப்புக் கொண்டால்கூட, அந்தப் போராட்டத்தின் அடையாளங்கள் அமுதனின் உடலிலும், அபிராமியின் உடலிலும் இருந்திருக்க வேண்டும்!

போலீஸ் வந்த பின்னர், டாக்டர்களின் பரிசோதனைகள் நடந்தன. அவற்றின் அறிக்கைகள் கோர்ட்டில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. அமுதனின் மார்பிலும், தோளிலும், கழுத்துப் பகுதியிலும், அபிராமியின் பற்கள் பதிந்த அடையாளம் இருந்திருக்கிறது. ஆனால், அவை போராட்டத்தால் வந்த அடையாளங்கள் இல்லை.

காமவெறியில் செல்லமாகக் கடிக்கப் பட்ட அடையாளங்கள் தான் என்று அமுதன் சொல்கிறார்.

மருத்துவர்களின் அறிக்கைகளைக் கூர்ந்து படித்தால் அமுதன் அபிராமி இருவருக்கும் அன்றிரவு செக்ஸ் தொடர்பு இருந்தது என்று நிரூபிக்கப்பட்டிருக்குமே தவிர, அங்கு பலாத்க்ாரம் நடந்ததாக சான்றுகள் கொடுக்கபட வில்லை.

பொதுவாக பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களின் உதடுகளைச் சுற்றிய, தொண்டைப் பகுதியிலோ அவர்களைக் கத்த



விடாமல் தடுத்திருந்தால் காயங்கள் உண்டாகும்.

மார்பு, வயிறு, மணிக்கட்டு, போன்ற பகுதிகளில் நகக்குறிகள் இருக்கும்.

முதுகில் சிராய்ப்பு இருக்கும். கால்கள் பலவந்தமாய் பிரித்திருந்தால், கணுக்கால்களிலும், அதற்கான அடையாளம் இருக்கும். உள் தொடைகளிலும், தொடைகள் சேரும இடத்திலும் காயம் இருக்கும்.

இந்த மாதிரி எந்தக் காயமும் அபிராமியின் உடலில் இருந்ததாக மருத்துவக் குறிப்புகள் சொல்லவில்லை. அபிராமி மயக்கமாகி விட்டதால் போராட்டம் இல்லை என்று அடுத்த கட்டுக்கதை...

அபிராமி, அமுதன் இருவரது உடைகளிலும் கண்டெடுக்கப்பட்ட கறைகள் பொதுவாக எந்த முதலிரவுக்குப் பின்னும் கண்டெடுக்கப்படக்கூடிய கறைகள்தான்.

செக்ஸை வைத்துக் கொள்ளவில்லை என்று என் கட்சிக்காரர் எந்த சந்தர்ப்பத்திலும் சொல்லவில்லை.

பலாத்காரம் செய்திருந்தால், போலீஸ் வரும் வரை அவர் அமைதியாக தன் அறையில் உட்கார்ந்திருப்பாரா என்று யோசியுங்கள். சட்டென்று அந்த அறையை காலி செய்து கொண்டு தப்பித்துத் தானே ஓடியிருப்பார்? தப்பிக்கும் எண்ணம் உள்ளவராய் இருந்தால், தன் விசிட்டிங் கார்டை அபிராமியிடம் கொடுப்பாரா?

இந்தியக் குற்றவியல் சட்டத்தில் செக்ஷன் 375 பலாத்கார கற்பழிப்பு பற்றி

விளக்கமாகக் கொடுத்திருக்கிறது.

அபிராமி பதினாறு வயதுக்குக் குறைந்த வரல்ல. அமுதன் தன்னை அவள் கணவன் என்று நம்ப வைத்து ஏமாற்றவில்லை. அவள் விருப்பத்திற்கு எதிராக செக்ஸை அவள் மீது திணிக்கவில்லை. பயமுறுத்தியோ, தன் பலத்தைப் பயன்படுத்தியோ அவளை அனுப வித்தது நிரூபிக்கப்படவில்லை. அபிராமி மனநிலை தவறியவோ, பக்குவமற்ற குழந் தையோ அல்ல. ஆல்கஹால் குடித்து விட்டோ, போதை மருந்தின் மயக்கத்திலோ தன் நிலையறியாது அவர் தன்னைத் தரவில்லை.

இந்திய சட்டப்படி பதினாறு வயதுக்கு மேற்பட்ட எந்தப் பெண்ணும் தான் விரும்பியவனுடன் செக்ஸில் ஈடுபடலாம்.

**Provided her consent is free,voluntary and conscious** என்று இந்திய சட்டம் சொல்கிறது.

அபிராமியின் சம்மதம் முழுமையான தாக, வற்புறுத்தப்படாததாக அவளாக முன் வந்து சுயநினைவுடன் தந்த சம்மதம் என்பதால்...

அமுதன் அபிராமியுடன் மே பன்னி ரண்டாம் தேதி இரவு வைத்துக கொண்ட செக்ஸ் உறவு பலாத்காரத்திலோ, கற்பழிப் பிலோ சேர்க்கப்படக்கூடாது என்று கனம் கோர்ட்டார் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

அமுதன் பேரில் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு அபத்தமானது, ஆதார மற்றது,



விஷமத்தனமானது. அவரது புகழிற்குக் களங்கம் ஏற்படுத்தி மிரட்டி பணம் பறிக்க செய்யப்பட்ட ஒரு சூழ்ச்சியே என்று இந்த கோர்ட் தீர்மானிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்...

தட்ஸ் ஆல், யுவர் ஆனர்...




நடந்து முடிந்த விசாரணைகளின் அடிப்படையிலும், இந்திய தண்டனைச் சட்டங்களின் பிரிவுகளின் அடிப்பயைிலும் கவனிக்கும்போது.

இந்திய தண்டனைச் சட்டம் 375 பிரிவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள பலாத்காரம் மற்றும் கற்பழிப்பு குற்றத்தை திரு அமுதன் செய்தார் என்று நிரூபிக்கப்படவில்லை என்று இந்த கோர்ட் கருதுகிறது.

அமுதன் சாவித் துவாரம் வழியாகப் பார்த்ததாக சந்தேகப்பட்ட அபிராமி அதன் பின் அவரோடு காப்பி அருந்த ரெஸ்ட்டா ரண்ட் போயிருக்கிறார் என்பதிலேயே அபிராமியின் குற்றச்சாட்டு பலவீனமா கிறது.

விட்டிலும் அதன் பின் உணவு விடுதியிலும் திரு அமுதன் கண்ணியமாகவே நடந்து கொண்டுள்ளார். செல்வி அபிராமி

யுடன் உறவே வைத்துக் கொள்ளவில்லை என்று அவர் அடம்பிடிக்க வில்லை. மருத்துவ பரிசோதனை அறிக்கைகளுக்குப் புறம்பாக அவர் எதையும் சொல்லவில்லை.

செல்வி அபிராமி தன் சுயநினைவு களுடன் தானாகவே முன வந்து முழு சம்மதத்துடனும், விருப்பத்துடனும் தான் திரு அமுதன் அவர்களுடன் உறவு வைத்துக் கொண்டார் என்று விசாரணைகளின் அடிப்படையில் இந்த கோர்ட் தீர்மானிக் கிறது.

எனவே, இந்திய தண்டனைச் சட்டம் செக்ஷன் 376-ன் கீழ் விவரிக்கப் பட்டுள்ள தண்டனைகளுக்கு திரு அமுதனை உட்படுதத முடியாது என்றும், அவர் குற்றமற்றவர் என்றும் இந்த கோர்ட் கருதி அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கிறது.

அபிராமி படித்த பெண்ணாக இருந்த போதும், தவறான குற்றச்சாட்டு மூலம் அமுதனின் புகழைக் குலைக்க முயற்சி செய்ததை இந்த கோர்ட் ஒரு எச்சர்க்கை யுடன் கண்டிக்கிறது.

இருந்த போதிலும் செல்வி அபிராமி யிடமிருந்து நஷ்டஈடு கேட்டோ, வழக்கிற் கான செலவுகளைக் கேட்டோ திரு அமுதன் எந்த கோரிக்கையும் வைக்காததால், இந்த எச்சரிக்கையுடன் செல்வி அபிராமியும் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்படுகிறார். மேலும்...

***



## 1985



## 5

தேங்யூ மேடம்.. தாங்க்யூ வெரிமச் மேடம்... என்று அமுதன் கண்களில் மத் தாப்பு ஜொலிக்க மீண்டும் நன்றி சொன் னான்.

சபிதா புன்னகைத்தாள். உண்மை என்றைக்கும் வெற்றி பெறும் என்றுதான் நான் சொன்னேனே அமுதன்.

உண்மைக்காக நான் விடுதலை செய்யப் படவில்லை மேடம்... உங்கள் வாதத்திறமை யால்தான் விடுதலை செய்யப் பட்டேன். பேசிய தொகையை விட உங்களுக்கு இரண்டு பங்கு தரலாம் என்று முடிவு செய்துவிட்டேன் மேடம்...

தேங்க்யூ... ஆனால் இந்த மேடம் மேடம் என்று கூப்பிடுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. சபிதா என்று தாராளமாக என் பெயர் சொல்லிக் கூப்பிடலாம்.

“உங்களுக்கு எப்போது எந்த உதவி வேண்டுமானாலும் என்னைத்தேடி வரலாம் சபிதாமேடம்...”

சபிதா சிரித்தாள். அமுதன்காரில் ஏறினான்.

அவனிடமிருந்து விடைபெற்றாள். நீதிமன்றத்தை விட்டு வெளிப்படும் வழியில் வேகமாக நடந்தாள்.

மரத்தடியிலிருந்து திடீரென்று ஒரு நிழல் நகர்வதை அவள் உணர்ந்து தயாராகும் முன், அவள் மீது அபிராமி கிட்டத்தட்ட மோதுவதுபோல் வந்து நின்றாள்.

சபிதாவின் இரு தோள்களை அபிராமி பற்றினாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் திரண்டு கன்னங்களில் வழிந்தது. உதடுகள் துடித்தன.

"இப்படி பொய் சொல்லி அந்த அயோக்கியனைக் காப்பாற்றி விட்டாயே! நீயும் ஒரு பெண்தான் என்பதை மறந்து விட்டு, எனக்கு இப்படி ஒரு துரோகம் செய்து விட்டாயே... காசுக்காக என்ன வேண்டுமானாலும் ஜாலம் செய்பவள் தானா நீ?

இன்னொருத்திக்கு பிரச்சனை என்றால் உனக்கு வெல்லக்கட்டி உனக்கே இந்த நிலைமை வந்தால்தான், இன்றைக்கு நான் என்ன பாடுபடுகிறேன் என்று புரியும்..." அபிராமியின் கண்கள் கனலைக் கக்கின.

சபிதாவை சற்று பின்னால் உந்தித் தள்ளி விட்டு அபிராமி தன் கைகளை விலக்கிக் கொண்டாள்.

நெருககமாகக் கடந்த காரிலிருந்து கவலையுடன் அமுதன் இதைப் பார்த்தும் அபிராமி அவன் பக்கம் கோபமாய் திரும்பினாள்.

"த்தூ ஊ ஊ..."

கார் விரைந்து மறைந்தது.



சபிதாவின் கண்களில் கோபம் வர வில்லை. ஆத்திரம் வரவில்லை. அபிராமி யைப் பார்த்து ஒரு அனுதாபம்தான் வந்தது.

அபிராமி சரலெனத் திரும்பினாள். தன் அம்மாவின் தோள்களை அணைத்துப் பிடித்தாள்.

"போகலாம், அம்மா!"




"சியர்ஸ்"

கண்ணாடிக் கோப்பைகள் முத்த மிட்டுக் கொண்டன. அமுதன் முதல் ஸிப் உறிஞ்சியதும், கோப்பையைத் தட்டிக் கொண்ட மகேந்திரனும், லிங்கனும் தங்கள் கோப்பைகளை உதடுகளில் பதித்தார்கள்.

"எங்கேடா பிடித்தாய் அந்த சபிதாவை? இந்த விளாசு விளாசி விட்டார்?" என்றான், மகேந்திரன் தன் நெற்றியை இரண்டு நுனி விரல்களால் துடைத்துக் கொண்டே.

"பவித்திரன் தான் சிபாரிசு செய்தான்"

"எந்த பவித்ரன்?"

"வக்கீல் ரங்காச்சாரியின் உதவியாளன், என் கம்பெனி கேஸ் விஷயமாக என்னைப் பார்க்க அடிக்கடி வருவான் என்று சொன்னேனே... அவன்தான் சபிதா தனியாகபிராக்டிஸ் செய்யப் போகிறாள் என்றும், ரொம்ப புத்திசாலிப் பெண் என்றும்

சொன்னான்.

“எந்த தடவையும் நீ இவ்வளவு சிக்கலில் மாட்டிக் கொண்டதில்லையே... கோர்ட்டுக் குப் போகிற அளவுக்கு எப்படி அபிராமியை விட்டு வைத்தாய்?” என்றான், லிங்கன் சற்றே ஆச்சரியமாக.

“அந்தப் பெண்ணை நிஜமாகவே லவ் பண்ணலாமே என்று நான் நினைத்து விட்டேன்டா...” என்றான், அமுதன் புருவங் களை உயர்த்தி “காலேஜ் படிப்பு, ஆராய்ச்சி என்ற அளவுக்கு வந்திருந்தாலும், அவளிடம் கொஞ்சம் இன்னஸன்ஸ் பாக்கி இருக்குது.

“யூ மீன் அசட்டுத்தனம்?”

“நோ, நோ... வெகுளித்தனம். எனக்கு ரொம்பப் பிடித்தது மட்டுமில்லை, அந்த வெகுளித்தனம் தான் என்னை ஏமாற்றி விட்டது அவள் போலீசுக்குப் போவாள் என்று சற்றுகூட யோசனை செய்யவிடாமல் தடுத்து விட்டது.

“இப்பொழுதாவது ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டிருப்பாய்” என்றான் லிங்கன். “எந்தப் பெண்ணையும் பார்த்த இடத்தில் பார்த்த மாத்திரத்தில் ஆசைப்பட்டு விடக் கூடாது.”

“ஆசைப்படலாம். ஆனால், இந்த ரிஸ்க்கையெல்லாம் பொது இடத்தில் வைத்துக் கொள்ள கூடாது. இதற்கு முன் னால் நான் அப்படி வைத்துக் கொண்ட தில்லை. இனிமேலும், வைத்துக் கொள்ளக் கூடாது.

“இது வரைக்கும் எத்தனை பேர் [illegible]”



“தின்றதா? துப்பியதா?”

“இரண்டும் தான்...” என்றான், மகேந் திரன், தன் கோப்பையை மறுபடி நிரப்பிக் கொண்டே.

“நாம் மூன்று பேருமாக சேர்ந்து அந்த சினிமா சான்ஸிற்கு வந்தாளே... அவள் பெயர் என்ன?”

“ரங்க நாயகி”

“பொய்... மூன்று பேருமாக ரங்கநாயகி... நானும், லிங்கனுமாக பொன்னி, பூரணி... நான் மட்டும் என்றால் ஜோதி, சூர்யகலா... கடைசியாக அபிராமி...”

“ஜோதி, சூர்யகலா இரண்டு பேரைப் பற்றிப் பேசாதே?”

என்றான், லிங்கன். அவன் கழுத்துப் பட்டை வியர்த்து விட்டது.

அமுதன் சிரித்தான். “ஏன்?”

“வேண்டாமே!”

“பயமாய் இருக்கிறதா? அவர்கள் இனிமேல் எழுந்து வந்து அபிராமியைப் போல் சாட்சி சொல்லப் போவதில்லை.”

“அமுதன்... பிளீஸ்... அவர்களைப் பற்றி பேச்சு வேண்டாம்.”

“வேறு யாரைப் பற்றிப் பேச வேண்டும்?”

“சபிதா... அந்த வக்கீல்! பார்த்தால் அவள் கூடஅழகாக தேவதை போல்தான் இருக் கிறாள். அவள் உன்னைப் பார்த்த பார்வை யில் ஒரு மயக்கம் இருந்தது. கவனித்தாயா?” என்றான், லிங்கன்.

"ஈஸிட்? என்னிடம் அப்படி என்னடா இருக்கிறது. அத்தனைப் பெண்களும் விட்டில் பூச்சிபோல் வந்து விழ? அமுதனின் குரலில் விஸ்கியோடு பெருமிதமும் கலந்திருந்தது.

"அவள் வக்கீலடா... விரல் நுனியில் நூறு செக்ஷன் வைத்திருப்பாள். அவளிடம் வாலாட்டி சிக்கிக் கொள்ளாதே என்றான் மகேந்திரன் கோப்பையை காலி செய்து.

"வக்கீலாய் இருந்தால் என்? அவளுக்கும் இரண்டு...

"டேய்..."

"அவளும் பெண் தானே?"

"வேறு விஷயம் பேசலாம்."

"நோ! அமுதன் தன் கண்ணாடி தம்ளரை வேகமாக வைத்தான். "சவால் விட்டு விட்டு பின்வாங்கு என்று சொன்னால் நான் பின்வாங்க மாட்டேன்"

"ஆறாவது ரவுண்டில் நீ சியர்ஸ் என்று சொன்ன போதே எனக்குத் தெரியும். உனக்கு நன்றாக ஏறியிருக்கிறது." என்று லிங்கன் சொன்னதும், அமுதன் பாய்ந்து எழுந்து அவன் சட்டையை மார்பருகில்,கொத்தாகப் பிடித்தான்.

"போதையில் உளறுகிறேன் என்று சொல்கிறாயா?"

லிங்கன் கண்களில் அச்சம் நிழலாடியது. "அப்படிச் சொல்லவில்லை, அமுதன்... ஆனால்..."

அமுதன் சட்டென்று அவன் சட்டையை விடுவித்தான். குனிந்து லிங்கனின் கால்களைத் தொட்டான். "ஸாரிடா உணர்ச்சி வசப்பட்டு சட்டையைப் பிடித்து விட்டேன்!"



"ப... பரவாயில்லை அமுதன்..."

"எனக்கு சபிதா வேண்டும்"

"அமுதன் இதைப் பற்றி நாளைக்குப் பேசுவோம்"

"நோ, மகி... இப்பொழுதே பேசித்தீர்ப் போம். எனக்கு சபிதா வேண்டும்! வேண்டும் என்று நான் நினைத்தபிறகு எப்படி என்று தான் பேச வேண்டுமே தவிர, வேண்டாம் என்ற பேச்சே வேண்டாம். மகி டூ யூ அண்டர்ஸ்டாண்ட்?"

"யெஸ்" என்றான், மகேந்திரன் வெளிறிய முகத்தோடு.

"டபுள் யெஸ்" என்றான், லிங்கன் அவசரமாக, அமுதன் வாய்விட்டு சிரித்தான் "பயப்படாதீர்கள் உங்களைக் கூப்பிட மாட்டேன். இப்பொழுது சியர்ஸ் ஒன்ஸ் மோர்" புது பாட்டிலை அமுதன் திறந்தான்.




சபிதா சந்தோஷமாயிருந்தாள்.

முதல் வழக்கிலேயே வெற்றி என்பது வக்கீல்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி விருதுக்கு சமம் என்று அவளுடைய சீனியர்

வாழ்த்தியிருந்தார்.

வாய்தா வாங்குவது, ஜாமீனு வாங்குவது போன்ற அற்பமான விவகாரங்களிலேயே முதன் முதலில் தனியே, செயல்பட்ட சக வக்கீல்கள் பலரும் ஒரு ஆபத்தான வழக்கில் தைரியமாக அவள் வாதிட்ட தன் கட்சிக் காரருக்கு வெற்றி வாங்கித்தந்ததைப் பொறா மையோடு வாழ்த்தினார்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி கூட அவள் தனியே சந்தித்த போது அவள் வாதாடிய விதம்தான் அமுதனுக்கு விடுதலை வாங்கித் தந்தது என்று பாராட்டி ஆசிர்வாதம் செய்தார்.

காலையில் கோர்ட் வளாகத்தில் அபி ராமி அவள் மீது எறிந்த கடும் சொற்களால் சற்றுக் கலங்கிப் போயிருந்ததற்கு சுற்றி யிருந்தவர்களின் வார்த்தைகள் தான் ஒரு மனத்தெளிவையே கொண்டு வந்திருந்தன. இந்த சந்தோஷத்தை கொண்டாட வேண்டும் போல் இருந்தது.

யாரோடு கொண்டாடுவது? இந்த சமயம் பார்த்து அந்த ப்ளடி பரசுராம் அமெரிக்காவில் போய் ஏதோ ஒரு கம்ப் யூட்டர் கம்பெனியில் உட்கார்ந்திருக்கிறான்!

இங்கே இருந்திருந்தால் இழுத்து வைத்து பச்சக் பச்சக் என்று முத்தம் கொடுத் திருப்பான்.

அவளுக்கு அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை எல்லாமே அன்பு இல்லம்தான். அங்கே அவளோடு வாழ்ந்த



ஆதரவற்றவர்கள்தான் அவர்களைப் பரா மரிக்கும் அந்தப் பெரியவர்தான்.

சபிதா தன் மோபெட்டை அன்பு இல்லத்திற்கு செலுத்தினாள்.

"வாம்மா!" என்று அவள் தலையை அன்புடன் வருடிக் கொடுத்தார் பெரியவர். "முதல் கேஸிலேயே நீ ஜெயித்தது ரொம்ப சந்தோஷம்மா... நம்ம இல்லத்தில் வளர்ந்த பெண் இப்போது சமூகத்தில் ஒரு அந்தஸ் துக்கு வந்திருக்கிறாள் என்பது எவ்வளவு பெருமையான விஷயம்!"

"எல்லாம் உங்கள் ஆசிர்வாதம்தான் தாத்தா..."

"ஒரு வழக்கை பணக்காரர்களுக்காக நடத்தினால், அவர்களிடம் நிறைய சம்பளம் வாங்கு, சபிதா. அதற்கடுத்த வழக்கை ஒரு ஏழைக்காக எந்தப் பணமும் வாங்காமல் நடத்திக் கொடு... அதுதான் என் ஆசை...

"நிச்சயம், தாத்தா... இன்றைக்கு எல் லோருக்கும் ஸ்வீட் கொண்டு வந்திருக் கிறேன்"

"உன் கையாலேயே கொடும்மா" என்று அவர் தன் தாடியைத் தடவிக் கொண்டே எழுந்தார்.

***

சபிதா இரவு தன் போர்ஷனில் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்த போது செய்திக் குறிப்பில் ஒரு மின்னல்போல் அமுதனின் புகைப்படம் காட்டப்பட்டது.

"பரபரப்பான கற்பழிப்பு வழக்கிலிருந்து

தொழிலதிபர் திரு அமுதன் இன்று விடு விக்கப்பட்டார்.

சபிதா டெலிவிஷனை அணைத்தாள்.

போதும். கட்ட கட்ட ஒரே விஷயத்தை எத்தனை விதமாக இன்று கேட்டாயிற்று!

கண்களை மூடினால் அமுதன், அரசு வக்கீல், அபிராமி, அவள் அழுகை என்று ஃபிரேம் ஃபிரேமாக அந்தக் காட்சிகளை எத்தனை வடிவங்கள் பெறுகின்றன!

"மேடம்... கங்கிராஜு லேஷன்ஸ்... நீங்கள் அமுதனை விடுவித்ததற்காக இந்த வாழ்த்து. ஆனால் எனக்கு உங்கள் பேரில் பர்ஸனலாகக் கொஞ்சம் வருத்தம் உண்டு" என்று இன்ஸ்பெக்டர் ரவிகுமார் சொன்னது நினைவுக்கு வந்தது.

ரவிகுமார் ஒரு புன்னகையுடன்தான் பேசினார். அவள் சீனியருக்காக ஆஜரான எததனையோ வழக்குகளில் அவளுடன் பணியாற்றிய நேர்மையான அதிகாரி அவர். கண்ணியமான தோற்றம் காரணமாகவே அவருடன் பேசும் போது ஒரு மூத்த அண்ணனுடன் பேசுவது போல் தான் அவளுக்கு ஒரு நிறைவு கிடைக்கும்.

"என்ன சார் என் மேல் வருத்தம்?"

"அபிராமியைப் பார்த்தால் பொய் சொல்பவள் போல் எனக்குத் தெரியவில்லை. அந்த அமுதன் சொல்வது எல்லாம் உண்மை என்றும் தோன்றவில்லை.

சபிதாவுக்கு சட்டென்று முகம் சுருங்கி விட்டது.



வழக்கைப் பற்றி வேண்டிய அளவிற்கு நீதிமன்றத்தில் பேசியாயிற்று. அவளுடைய சீனியர்அடிக்கடி சொல்லும் வாக்கியம் தான் நினைவுக்கு வந்தது.

"எந்தப் பிரச்னையும் இல்லாதவன் ஒரு வக்கீலைத் தேடி வர வேண்டிய அவசியம் இல்லை. சபிதா. ஒருத்தன் நம்மைத்தேடி வந்து விட்டால், அந்த வழககை நாம் ஏற்றுக் கொண்டு விட்டால், அந்த க்ளையண்ட் இடத்தில் நம்மை உட்கார்த்தி வைத்துப் பார்த்து முழு மூச்சாக அவனுக்காக செயல்பட வேண்டியதுதான நம் கடமை. நியாயமா அநியாயமா என்று முடிவு செய்ய வேண்டியது கோர்ட்தானே தவிர வக்கீல் இல்லை. உன் கடமையைச் செய், நல்லதா, கெட்டதா என்று நீ தீர்மானிக்காதே என்றுதான் கீதை கூட சொல்கிறது..."

அவ்வளவுதான். அவ்வளவேதான் நான் செய்தது!

"சபிதா... ஆறு மாசத்திற்கு முன்னால் அடுத்தடுத்து இரண்டு பெண்கள் காணாமல் போனார்களே, ஞாபகம் இருக்கிறதா?" என்று இன்ஸ்பெக்டர் ரவிகுமார் கேட்ட போது இயல்புக்கு வர சபிதாவிற்கு சில நொடிகள் பிடித்தன.

"இரண்டு பேருடைய உடல்களும் தான் நமக்குக் கிடைத்தன. அந்த இரண்டு பேருமே கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட் டிருப்பதாக டாக்டர்களின் ரிப்போர்ட் சொன்னது. ஆனால் குற்றவாளி யார் என்பதற்கு எந்தத் தடயமும் கிடைக்காமல்

போலீஸ் இன்றுவரை திணறிக் கொண்டிருக்கிறது.

"அதை எதற்கு இப்போது சொல்கிறீர்கள் சார்?" சபிதா சற்றே சினத்துடன் கேட்டாள்.

"அந்த இரண்டு பேரும் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் அமுதனோடு போனில் பேசியவர்கள் என்று போலீஸிற்குத் தெரிய வந்தது."

"ஸோ வாட்?"

"இந்த ஸோ வாட்டால்தான் போலீஸில் மேற்கொண்டு எந்த முடிவிற்கும் வர முடியவில்லை. எத்தனையோ பேருக்கு அவர்கள் போன் செய்திருக்கிறார்கள். அதில் அமுத்னும் ஒன்று என்று கோர்ட்டில் சொல்லப்பட்டால் அதற்கு எதிரான வாதம் எங்களிடம் இல்லை. அதனால் தான் பேசாமல் விட்டு விட்டோம். கற்பழித்த பெண்கள் என்ற வரிசையில் மூன்றாவதாக அபிராமியும் அமுதன் பற்றி புகார் கொண்டு வந்தது கூட எதேச்சை என்று சட்டம் சொல்லும் என்பதால்தான் எங்கள் கைகள் கட்டிப் போடப் பட்டுள்ளன."

"என் கேஸில் ஜெயிக்க வேண்டும் என்பதுதான் சார் என் முயற்சியாக இருந்தது" என்று பளிச்சென்று அப்போது அவரிடம் சொல்லி விட்டாள்.

யோசித்துப் பார்த்தால் இளம் ரத்தம் என்பதால் எந்த விமர்சனத்தையும் ஏற்றுக் கொள்ளப் பிடிக்கவில்லையோ என்று கூட தோன்றியது.



அவளுடைய துடிப்பையும், பரபரப்பையும் மூத்தவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று ஆதங்கமாகத் தான் இருந்தது.

திடீரென்று போன் ஒலித்ததும், கலைக்கப்பட்டு ரிசீவரை எடுத்தாள்.

"ஹாய்டா..." என்று அவள் காதில் உற்சாக.ஊற்று பாய்ந்தது.

பரசுராம்! அமெரிக்காவிலிருந்து!

"ஆன்ஸரிங் மெஷினில் இரண்டு தடவை போன் பண்ணியிருக்கிறாய் என்று தெரிந்தது. என்னடா விஷயம்?"

"ஓகோ... நான் போன் பண்ணினால் தான் பதிலுக்கு போன் செய்வீர்களோ?" சபிதாவின் குரலில் செல்லமான போலிக் கோபம் ஊந்திருந்தது.

"முட்டாள். உங்கள் ஊரில் பகல் நேரம் என்றால் இங்கே ராத்திரி என்பதை மறந்தாயா? தூங்கும்போது கூட ஆன்ஸரிங் மெஷினைப் போடக் கூடாதா?" பரசுராமும் அதே செல்ல தொனியில் பதில் சொன்னான்.

"உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும்டா, ராஸ்க்கல்... எங்கேயோ கைக்கெட்டாத் தூரத்தில்போய் உட்கார்ந்திருக்கிறாயே!"

"கைக்கெட்டும் தூரத்தில் இருந்த போதெல்லாம் உதடுகளுக்கு ஜிப் போட்டு மூடி வைத்துக் கொள். அமெரிக்காவில் நான் உட்கார்ந்திருக்கும் போது இப்படி வெறுப்பேற்று!

"ஏய்... உண்மையாகச் சொல்.: எல்லா

தடவையும் நான் வாய்க்கு ஜிப் போட்டா வைத்திருந்தேன்? அன்றைக்கு ஏர்ப்போர்ட்டில் நீ கிளம்பும் போது... மறந்துவிட்டாயா?"

"ஓகே... ஓகே... சரண்டர், வக்கீலம்மா... மேட்டருக்கு வா!"

"இன்றைக்கு என் முதல் கேஸில் வெற்றி, வெற்றி, வெற்றி! அதை உன்னிடம் உடனே சொல்ல வேண்டும் போல் இருந்தது. நீ கும்பகர்ணனாய் தூங்கி கொண்டிருபபாய் என்று தெரியும்... இருந்தாலும் என்னால் என் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. அதுதான் இரண்டு தடவை போன் பண்ணி விட்டேன்.

"கிரேட்! எக்ஸலண்ட்! எக்ஸ்யூப ரேட்டிங்..."

"ஷ்! இந்த டிக்சனரி வார்த்தையெல்லாம் அளந்து விடாதே..."

"என் செல்லக் கண்ணம்மா. டைரியில் இந்த தேதியை போட்டு குறித்து வைத்துக் கொள். பரசுராமுக்கு கீடன் பாக்கி நூறு முத்தம் என்று. நான் இந்தியாவிற்கு வந்து கால் வைத்ததும் வட்டியோடு வசூல் பண்ணியாக வேண்டும். இன்றைக்கு இங்கே நான் இதைக் கொண்டாடியாக வேண்டும்."

"எப்படிக் கொண்டாடுவாய்?"

"மூச்சு முட்ட விஸ்கியை நிரப்பிக் கொண்டு விட மாட்டேன்?"

"ஏய். விஸ்கி கிஸ்கி என்று போனாயோ, கடன் பாக்கியை இப்பொழுதே கான்ஸல் பண்ணிவிடுவேன்."

"பெண்டாட்டியாவது கூட இருந்து



தான் கன்ட்ரோல் பண்ணுவாள். ரிமோட்டிலேயே உத்தரவு போடுகிறாயே, ராட்சசி!

பரசுராம் போனில் சிரித்துக் கொண்டே சொன்னபோது, சபிதாவிற்கு சந்தோஷம் கூடிப் போனது.




சபிதா குளித்து விட்டு வந்திருந்தாள், ஹால் ஆணியில் துர்க்கையின் படம் தொங்கியது.

பதினெட்டு கைகள் கொண்ட துர்கை, அதில் ஆறு கைகளில் ஆயுதங்கள் பிடித்திருந்த துர்கை, வேறு என்னென்னவோ கடவுள் படங்கள் அழகழகாகக் கிடைத்த போதும், சபிதா இந்தப் படத்தை விரும்பிக் கேட்டு வாங்கியிருந்தாள்.

மர ஸ்டூல் போட்டு ஏறி துர்கையின் படத்திற்கு கதம்பப் பூவை அணிவித்தபோது போன் ஒலிக்க ஆரம்பித்தது.

சபிதா ஸ்டூலிலிருந்து இறங்கினாள். ரிசீவரை எடுத்தாள்.

"குட் ஈவினிங்," என்றது உற்சாகமான மறு முனைக் குரல்.

"தெரிகிறதா என்னை? நான் அமுதன்!"

"குட். ஈவினிங்..." என்றாள், சபிதா அதே உற்சாகத்தோடு.

"இப்போது தான் பிராக்டிஸிலிருந்து திரும்பியிருப்பீர்கள்... டயர்டாக இருப்பீர்கள்... வெரி ஸாரி ஃபார்தி டிஸ்டர்பன்ஸ்..."

"நோ... நோ... குளித்து விட்டு புத்துணர்ச்சியோடுதான் இருக்கிறேன்... சொல்லுங்கள் அமுதன்..."

"நான் உங்களுக்கு ஒரு ட்ரீட் கொடுக்க வேண்டும் என்று கூப்பிட்டேன்... மறுத்து விட்டீர்கள்..."

"பேசிய தொகையைப் போல இரண்டு பங்கு ஃபீஸ் கொடுத்து விட்டீர்களே... அதுவே நீங்கள் வற்புறுத்தியதால்தான் வாங்கிக் கொண்டேன்.. போதுங்க ட்ரீட்டும் வேண்டாம், அமுதன்..."

"ட்ரீட்தான் வேண்டாம்... பிஸினஸை வேண்டாம் என்று சொல்லி விடமாட்டீர்களே?"

"பிஸினஸா?"

"நான் புதிதாக ஒரு கிரானைட் ஃபாக்டரி ஆரம்பிக்கப் போகிறேன், சபிதா. அதில் நான்கு பார்ட்னர்கள்... நான், என் நண்பர்கள் இரண்டு பேர், நீங்கள்!"

"நானா!" சபிதாவின் குரலில் வியப்பு மேலிட்டது.

"நான் எப்படி உங்கள் கம்பெனியில் பார்ட்டனராக முடியும்?"

"பணம் போட நான் இருக்கிறேன். அன்றாட பிஸினஸைப் பார்த்துக் கொள்ள என் நண்பர்கள் இருக்கிறார்கள். ஏற்றுமதி - இறக்குமதி - பாங்க் விவகாரம், லீகல்



பிராப்ளம்ஸ் இதையெல்லாம் கையாள எங்களுக்கு ஒரு பார்ட்னர் தேவைப்படுகிறது. கிழக் கட்டைகளுக்கு அனுபவம் இருக்கும் தவிர, துடிப்பு இருக்காது... சட்டத்தை மீறி நாம் எதுவும் செய்யப் போவதில்லை என்பதால் ஒரு துடிப்பான பார்ட்னராக உங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆசை..."

"என்னிடம் ஒரு பைசா கூட கிடையாது, முதலீடு செய்ய!"

"விலை மதிப்பில்லாத உங்கள் புத்திசாலித்தனம்தான் எங்களுக்குத் தேவை... மாதம் முப்பதாயிரம் சம்பளம், கார், டெலிபோன் எக்ஸ்ட்ரா. சம்பளம் குறைவாய் இருக்கிறது என்று நினைக்காதீர்கள்... ஆறு மாதம் கழித்து பிஸினஸ் கால் ஊன்றியவுடன் அதிகரித்துக் கொள்ளலாம்..."

"ஐயோ... நான் பிராக்டிஸ் செய்வதை விட்டுவிட்டு எங்கேயும் சம்பளத்திற்கு போக நினைத்ததில்லையே, அமுதன்..."

"பிராக்டிஸ் செய்வதை யார் நிறுத்தச் சொன்னார்கள்? வாரத்திற்கு மூன்று நாள் மட்டும் பார்ட் டைமாக சாயந்திரத்திலும், சனிக்கிழமை மட்டு முழு நாளும் நீங்கள் வந்தால் போதும்... அதுகூட நாம் நேரில் பேசி உங்களுக்கு சௌகரியமான நேரத்திற்கு செட்டில் ஆகலாம்..."

"நான் யோசிக்க வேண்டும்..."

"நிறைய விஷயங்களை நான் போனில் பேச முடியவில்லை. உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நாம் நேரில்

சந்தித்து சில விஷயங்களைப் பேசலாமா? அப்புறம் நீங்கள் தேவையான நேரம் எடுத்துக் கொண்டு முடிவு சொல்லலாம்... என் பார்ட்னர்களும் உங்களைப் பார்க்க ஆவலாயிருக்கிறார்கள்..."

"சந்திப்போமா... எப்பொழுது?"

"இப்போது உங்களுக்கு சௌகரியப் படுமா? ஜஸ்ட் ஒன் அவர்?"

"இப்பொழுதா?"

"ஜஸ்ட் ஒரே ஒரு மணி நேரம்..."

"எங்கே?"

"போஸ்ட் ஆபீஸ் வாசலில் வெயிட் பண்ண முடியுமா? நானே உங்களை பிக் அப் பண்ணிக் கொள்கிறேன்... அங்கிருந்து என் பார்ட்னர் ஆபீஸிற்குப் போகலாம்... திரும்பக் கொண்டு வந்து உங்கள் வீட்டில் நானே டிராப் செய்து விடுகிறேன்."

"எனக்கு அரை மணி நேரம் தர முடியுமா?"

"அஃப்கோர்ஸ்... நான் காருடன் வருகிறேன்!"

அமுதன் குரல் பணிவாகச் சொன்னது.

தொடர்பு அறுந்தது.

சபிதா ரிஸீவரை வைத்து தன் கையை தானே உற்சாகமாகக் குத்திக் கொண்டாள்.

மாசம் முப்பதாயிரம், கார் மற்றும் பல.

கம்பெனி டைரக்டர் என்ற அந்தஸ்து.

இவ்வளவு இளம் வயதில் எல்லோருக்கும் இது சாத்தியமா? எவன் சொன்னான், ஒரு பெண்ணால் முடியாது என்று?



நான் சாதித்துக் காட்டப் போகிறேன்!

டியர் டியர் பரசுராம்... இன்றைக்கிரவும் உன் தூக்கத்தைக் கலைத்து உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கும்! நான் ஒரு பிஸினஸ் பார்ட்னராகப் போகிறேன்!

கடனாக இன்னும் நூறு முத்தங்கள் சேரப்போகிறது.




**வெ**ட்கமும், உற்சாகமுமாக சபிதா உடை மாற்றத் துவங்கினாள்.

கார் சீரான வேகத்தில் பயணம் செய்தது. அமுதன் அதை வெகு சுலபமாகக் கையாண்டான். காருக்குள் ஒரு ரசிக்கத்தக்க நறுமணம் கமழ்ந்தது. செவிகளுக்குஇதமான இசை ஸ்டீரியோ ஸ்பீக்கர்களில் மெல்ல அதிர்ந்து ஏர்கண்டிஷனர் குளிர் காற்றை காருக்குள் நிரப்பிக் கொண்டிருந்தது.

சபிதா அமுதனுக்கு அடுத்த முன் இருக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

கார்பயணத்தை அவள் மிக ரசித்தாள்.

கறுப்புக் கண்ணாடிகளுக்கு வெளியே தெரிந்த போக்குவரத்தில் இருந்த பெரும் பாலான கார்களில் இந்த அளவு வசதி இருக்குமா என்று யோசித்தாள்.

இந்தப் பேச்சு வார்த்தை மட்டும்

சுமுகமாக முடிந்து விட்டால், அவளுக்கென்று ஒரு கார் கொடுக்கப்படும். அந்தக் காரிலும் ஏஸி, சங்கீதம், நறுமணம் எல்லாம் இருக்கும்.

பணத்தினால் எத்தனை நல்ல விஷயங்களை வாங்க முடிகிறது! நினைவு தெரிந்த நாளிலிருந்தே அன்பு இல்லத்தின் பராமரிப்பில் வறுமையின் உலர்ந்த பிடியில் வசித்து வளர்ந்தவளுக்கு இந்த வசதிகள் ஒரு ஆடம்பரம் தான் என்று தோன்றியது.

காருக்கு வெளியே தெருவிளக்குகள் பூத்திருந்தன. போக்குவரத்து தேய்ந் திருந்தது.

கார் இப்போது நகரத்திற்கு வெளியே செல்லும் பாதையில் திரும்புவதை சபிதா கவனித்தாள்.

“எங்கே போகிறோம்?” என்றாள்.

“புது மகாபலிபுரம் சாலையில், தான் நம் கிரானைட் ஃபாக்டரிக்கான இடம் வாங்கியிருக்கோம்” என்றான், அமுதன், தன் வசீகரமான புன்னகையை விரித்து.

நம் கிரானைட் ஃபாக்டரி! இன்பத் தேன் வந்து பாய்ந்தது சபிதாவின் காதுகளில்...

“அந்த ஸ்பாட்டுக்கு போகிற வழியில் காட்டுகிறேன்... அங்கேயிருந்து பக்கத்திலேயே என் பார்ட்னரின் பண்ணை வீடு இருக்கிறது. அங்கேதான் என் நண்பர்களைசந்திக்கிறோம்...”

“மீட்டிங் ஆபீஸில் இருக்கும் என்றல்லவா நினைத்தேன்?” சபிதாவின் குரலில் சின்ன ஆட்சேபம் இருந்தது.



“நோ பிராப்ளம்” என்றான், அமுதன். “நீங்கள் ஒரு கிரேட் லாயர். உங்களுக்கு தைரியம் அதிகம். அதனால் ஆண்கள் இருக்கும் வீட்டிற்கு பிஸினஸ் விஷயமாக பேச வர தயங்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். இப்பொழுதும் நோ பிராப்ளம்... நம் ஆபீஸிலேயே மீட்டிங்கை வைத்துக் கொள்ளலாம். பார்ட்னரைப் பிக்அப் செய்து கொண்டு ஆபீஸிற்கே போய் விடுவோம்” அமுதன் குரலில் தேன் சொட்டியது.

“தைரியம் இல்லாமல் போய் விடவில்லை” என்றாள், சபிதா. “ஆனால் சில விஷயங்களை முறைப்படி செய்வதுதான் நியாயம்! ஆபீஸ்மேட்டரை நான்கு நண்பர்களாக உட்கார்ந்து விஸ்கி குடித்துக் கொண்டோ, சிகரெட் ஊதிக் கொண்டோ பேசுவது என்பது சரிவராது என்பது என் கருத்து...”

சபிதா சிரித்துக் கொண்டேதான் சொன்னாள்.

அமுதன் சட்டென்று திரும்பிப் பார்த்து விட்டு காரை தொடர்ந்து செலுத்தினான்.

சாலையின் இரு பக்கமும் கிராமங்கள் போல் தென்பட்டன. எங்காவது ஒரு பெட்டிக்கடை, எப்போதாவது ஒரு பெரிய விளம்பர போர்டு, நிறைய இடைவெளிகள் விட்டு வீட்டு மனைகள். ஒதுக்குப்புறமாய் ஒரு வீடு, இந்தக் காட்சிகளே இரு பக்கமும் தொடர்ந்தன.

அமுதன் காரை ஓரிடத்தில் நிறுத்தினான்.

இடது புறம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெறுமையாக இருந்த ஒரு காய்ந்த நிலப்பரப்பைக் காட்டினான்.

"இங்கே தான் நம்முடைய ஃபாக்டரி வரப் போகிறது....அடுத்த மாதத்திலிருந்து வேலை ஆரம்பிக்கப் போகிறோம்..."

சபிதா கார் கண்ணாடியை இறக்கினாள்.

ஏ.சி. காற்றையே சுவாசித்துக் கொண்டிருந்தவளுக்கு அந்த இயற்கைக் காற்று நுரையீரலுக்கு இதமாக இருந்தது. ஆங்காங்கே சிமெண்ட் தூண்கள் நட்டு, இரும்பு வேலி போடப்பட்ட அந்த நிலப்பரப்பு பிரம்மாண்டமான தாய் இருந்தது.

"நல்ல இடம்!" என்றாள். கண்ணாடியை மேலே ஏற்றினாள்.

கார் சிறிப்புறப்பட்டது.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தாண்டியதும், பிரதான சாலையிலிருந்து விலகி இடதுபுறம் பிரிந்த மண்பாதையில் புழுதி பறக்கத் திரும்பியது.

"இங்கேதான் என் நண்பனின் ஃபார்ம் ஹவுஸ் இருக்கிறது..."

கார் கடற்கரை நோக்கி நீண்ட மண் பாதையில் வேகம் குறைந்தது.

இரு பக்கமும் தென்னந்தோப்பு. இடையில் இந்த மண்பாதை.

சிலநூறு மீட்டர் பயணம் செய்ததும் குறுக்கில் ஒரு இரும்புச் சங்கிலி பாதையை மறித்திருந்தது.

அமுதன் காரை நிறுத்தாமல், அதன்



முன் விளக்குகளை நான்கு முறை சட்சட் என்று அணைத்துப் போட்டான்.

எங்கிருந்தோ ஒரு வாட்ச்மேன் உருவாகி ஓடி வருவது காரின் முன் விளக்குளின் வெளிச்சத்தில் தெரிந்தது. காரின் வெளிச்சம் அபாரமாக இருந்ததால், வாட்ச்மேன் தன் கண்கள் கூச ஒரு கையால் கண்ணுக்கு மேல்குடை போல் பிடித்தபடி ஓடிவந்து சங்கிலியை அவிழ்த்துப் பாதையிலிருந்து ஒதுங்கி நின்று சல்யூட் அடித்தான்.

கார் வேகம் எடுத்து விரைந்தது.

"நீங்கள் கார் லைட்டை அனைத்திருக்கலாமே, அமுதன் பாவம் அவனுக்கு எப்படி கண் கூசியது, பார்த்தீர்களா?"

"கண் கூச வேண்டும் என்று தானே லைட்டை அணைக்காமல் இருந்தேன்!" என்றான் அமுதன்.

"காரில் என்னோடு யார் வருகிறார்கள் என்று அவனுக்கு தெரியக் கூடாது" காரை அனுமதிப்பதற்கு நான்கு முறை விளக்கை அணைத்துப் போட்டேனே, அவ்வளவுதான் அவனுக்கும் எனக்கும் பேச்சு..."

"ஏன்?"

"பல பிஸினஸ் ரகசியங்கள் வேலைக்காரர்கள் மூலம்தான் லீக் ஆகின்றன, சபிதா. வேறு கம்பெனி ஆட்கள் எங்களை சந்திக்க வரலாம் போகலாம். இதைப் பற்றியெல்லாம் வாட்சுமேன் வெளியே சொல்லிக் கொண்டிருந்தால் எவ்வளவு ரிஸ்க் என்று யோசியுங்கள். மூன்று பார்ட்னர்களும் இந்த கெஸ்ட் ஹவுஸிற்கு வருவோம்,போவோம்...

ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வாட்ச் மேன் இருந்தால் கூட இதுதான் ஏற்பாடு. காருக்குள் யார், யார் இருக்கிறார்கள் என்ற விவரம் வாட்ச் மேனுக்கு அவசியமில்லை!"

'பாதை வளைந்து திரும்பியது.

அமுதன் தன்னிடமிருந்த ரிமோட் போன்ற கருவியை எடுத்து அழுத்தினான்.

எதிரே இருந்த கேட் எலக்ட்ரானிக் ஆணைப்படி தன் சக்கரங்களில் நகர்ந்து வழிவிட்டது.

"இங்கே வாட்ச்மேன் கிடையாதா?"

"பொதுவாகவே கேட்டைத் தாண்டி சிப்பந்திகள் வர வேண்டிய அவசியமில்லை... நான் முன் கூட்டியே சொன்னால் ஒழிய வேலைக்காரர்கள் கூட இங்கே இருப்பதில்லை..." காரை போர்ட்டிக்கோவில் நிறுத்தி ரிமோட்டை மீண்டும் அழுத்தினான். கேட், தானியங்கி தயவில் தானாக மூடிக் கொண்டது.

காரிலிருந்து இறங்கினார்கள்.

அமுதன் தன்னிடமிருந்த சாவியால் அலங்காரமான கதவைத் திறந்தான்.

வட்ட வடிவமான ஹால், பன்னிரண்டடி உயரக் கூரை. வட்ட சுவரில் ரசனை மிக்க ஓவியங்கள்.

நடுஹாலில் தொங்கும் கண்ணாடிக்கு தேன் கூடு ஷாண்ட்லியர் அது இறைத்திருக்கும் டிசைன் டிசைனான வெளிச்சம். ஹாலின் வலது புறம் பிறைநிலா வடிவத்தில் குஷன் சோபாக்கள். இடது புறம் சோனி



தொலைக்காட்சிப் பெட்டி. ஆடியோ சிஸ்டம்.

ஹாலின் மையத்தில் இருந்த மீன் தொட்டிதான் சபிதாவை வெகுவாகக் கவர்ந்தது.

மாபெரும் வட்டத் தொட்டி, கண்ணாடித் தொட்டிக்குள் வெளிர் நீல நிற நீர். நீரை சிதறடித்து பரபரப்பாக நீந்திக் கொண்டிருக்கும் மீன்கள். கறுப்பு, வெள்ளை, சாம்பல், தங்கம் என்று எத்தனை பளபளப்பான மீன்கள்.

ஸ்ப்லிட் ஏ.ஸி. என்று சொல்லப் படும் குளிர்சாதனக் கருவியால் ஒலியில்லாமல் ஹாலில் குளிர்காற்று நிரம்பியிருந்தது.

சபிதா தன்னையறியாமல் மீன் தொட்டி அருகே போய் நின்றாள். நீரைக் கிழித்து நடைபோடும் மீன்களை சற்று நேரம் வேடிக்கை பார்த்தாள்.

வெகு அருகே மூச்சுக் காற்றின் ஒலி கேட்டதும், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

வெகு நெருக்கமாக அமுதன் நின்றிருந்தான்.

"யூ லைக் இட்?" என்று புன்னகையுடன் கேட்டான்.

சபிதா இயல்பாக நகர்வது போல் இரண்டடி நகர்ந்து நின்றாள்.

"உங்கள் நண்பர்கள் எங்கே?"

அமுதன் திடீரென வாய்விட்டு சிரித்தான். "நீங்கள் அதை நம்பினீர்களா?"

"எதை?" சபிதா புருவங்களை உயர்த்தினாள்.

"என் நண்பர்கள் இங்கே காத்திருப்பார்கள் என்று?" சபிதாவிற்கு முதன் முறையாகக் கன்றுக்குட்டி உதைத்தது.

"வாட் டூ யூ மீன்?"

"இது என் நண்பனின் பண்ணை வீடு என்று சொன்னது டூப், இது என்னுடைய சொந்தப் பண்ணை வீடு. பிஸினஸ் பேசப் போவது நானும் நீங்களும் மட்டும்தான்!"

"இதென்ன விளையாட்டு?"

"விளையாட்டு இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறது, அப்படி உட்கார்வோமா?"

சபிதாவின் முகத்தில் சிரிப்பு முற்றிலும் மறைந்து போனது.

"இதைப் போன்ற ஜோக்கை நான் ரசிப்பதில்லை, அமுதான்..." என்றாள். குரலில் சினம் சேர்த்து.

"ஜோக் இல்லை. சத்தியம்!" அமுதன் சோபாவில் அமர்ந்தான். கால் மேல் போட்டுக் கொண்டான்.

"முதலில் நாம் பிஸினஸே பேசுவோம்."

சபிதாவிற்கு நிறைய கோபம் வந்தது அமுதன் மீது! தன் மீது! பெரிய பிஸினஸ் என்றான். பார்ட்னராக சேரலாம் என்றலாம். உடனே நம்பிக் கொண்டு தனியே இவனுடன் புறப்பட்டு வந்தது முட்டாள்தனமா? எத்தனையோ ஆண்களுடன் நீண்ட தொலைவு



களுக்கு அவள் பயணம் மேற்கொண்டதில்லையா என்ன?

"உங்களுக்கென்ன பைத்தியமா, அமுதன்?" என்றாள், சூடாக.

"என் கம்பெனியில் உங்களை பார்ட்னராக சேர்த்துக் கொள்ளும் ஐடியா இப்போதும் மாறவில்லை, உங்கள் அறிவுத் திறமை மீது எனக்கு இன்னமும் மதிப்பு குறையவில்லை. ஆனால் உங்களிடம் ரசிப்பதற்கு அறிவைத் தவிர இன்னும் எவ்வளவோ இருக்கிறதே, சபிதா!"

"உங்களோடு எனக்கென்ன பேச்சு?"

சபிதா விடுவிடுவென்று வாசல் கதவை நோக்கி நடந்தாள்.

அமுதன் கை தட்டி சிரித்தான்.

"அந்தக் கதவு இரண்டு பக்கத்தில் இருந்தும் பூட்டிக் கொள்ளும். சாவி போட்டால்தான் திறக்க முடியும். சாவி என்னிடம் இருக்கிறது. வா சபிதா இப்படி வா... உட்கார், நாம் பேச்சில் ஆரம்பிப்போம். என்னது? மாட்டாயா? தானாகக் கிடைத்தால் ஒரு ருசி. துரத்திப் பிடித்து மடக்கினால் அது ஒரு ருசி... நாம் இரண்டாவது விளையாட்டு விளையாடுவோமா?"

அமுதன் தன் இருக்கையிலிருநது எழுந்தான்.

***




சபிதா கதவை மிக நெருங்கியிருந்தாள்.

கதவைப் பார்த்ததும் புரிந்தது. அமுதன் சொன்னது உண்மைதான். சாவி இருந்தால் தான் கதவைத் திறக்க முடியும்.

சபிதாவின் ரத்தம் வேகம் எடுத்தது.

ஒரே பாய்ச்சலில் அங்கிருந்த டெலி போனை அடைந்து ரிசீவரை எடுத்தாள்.

அமுதன் "பத்சு.. ப்த்சு..." என்றான். "எல்லாமே எலக்ட் ரானிக் டெலிபோன். நான் பதிவு செய்திருக்கும் ஒரு சங்கேத எண்ணைத் தட்டினால்தான் வேலை செய்ய ஆரம்பிக்கும்!"

"நில்!" சபிதா இரைச்சலாகக் கத்தினாள். "என்னை சாதாரணமான முட்டாள் என்று எடை போட்டிருக்கிறாயா? நான் நினைத் தால் உன்னை ஆயுள் வரைக்கும் சிறையில் வைத்திருக்க முடியும்!"

"நான் நினைத்தால் உன் ஆயுள் வரைக் கும் உன்னை இங்கேயே சிறை வைத்திருக்க முடியும்!" அமுதன் பற்களைக் காட்டினான். "தானாக படிந்தால் உனக்குக் காயம் இருக்காது.. போராடினால் எனக்கு ஜாலி, யூ நோ ஐ என்ஜாய் ரேப்!"

"அப்படியானால் அந்த அபிராமியை..."

"அபிராமி மட்டுமில்லை... இன்னும்



சில பேரை!"

"ஆனால் என்னை அந்தப் பட்டியலில் சேர்க்க நினைக்காதே" சபிதா கடுமையான குரலில் சொன்னாள். ஆனால் இது கோர்ட் இல்லை. இங்கே அவளுடைய பேச்சுத் திறமையால் எதிராளியைப் பணிய வைத்து விட முடியாது என்பது அவளுக்கு புரிந்தது.

சபிதா ஒரு வக்கில் என்பதை விட அடிப்படையில் ஒரு பெண்தான் என்பதை இந்தக் கணத்தில் வெகுவாக உணர்ந்தாள்.

அந்த உணர்வு வந்ததும், ஒரு கணம் கூட தாமதிக்காமல் பாய்ந்தாள். ஹாலிலிருந்து விடுபட்டு ஏதாவது ஒரு அறைக்குள் ஓடிப் போய் சாத்திக் கொள்ளலாம்.

ஆனால் அமுதனின் பாய்ச்சல் அதை விட வேகமாய் இருந்தது. அவள் ஓடிய வேகத்தில் அவனுடைய கை எப்போது எப்படி நீண்டது என்று புரியும் முன் அமுதன் அவள் இடுப்பை வளைத்திருந்தான்.

அவள் ஓடிய வேகம் காரணமாக அவன் சரேலெனத் தடை போட்ட கதியில் இருவருமாக அங்கே தரையில் விழுந்தார்கள்.

மெத்தென்று கம்பளம் விரித்த தரை.

அமுதனின் மீது சபிதா விழுந்தாள்.

அந்த வேகத்திலேயே அவன் முகத்தில் தன் மண்டையால் முட்டினாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்ததை விட அமுதன் அபார பலத்துடன் இருந்தான். தன் முகத்தை சரேலெனக் குனிந்து தன் மண்டை உச்சியால் சபிதாவின் தாக்குதலை எதிர் கொண்டான்.

சபிதாவின் மண்டை அவன் மண்டை மீதுமோதிய வேகத்தில் ஜிவ்வென்று அவளுக்குள் ஒரு ராக்கெட் வெடித்தது. காட்சிகள் அத்தனையும் கண நேரத்திற்குத் தட்டாமாலை சுற்றின.

அமுதன் அவளை அப்படியே புரட்டி னான். அவள் கீழேயும், அவளை அழுத்தி மேலே அவன் பாரமும் என்று ஆனது, சபிதா முனங்கினாள்.

அவளுடைய இரு கைகளையும் அமுத னின் கைகள் தரையோடு அழுத்தின.

சபிதா அவனைப் புரட்டப் பார்த்தாள். ஒரு கையை விடுவித்து அமுதன் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து காப்ஸ்யூல் மருந்து போல் ஒன்றை எடுத்தான். சபிதாவின் வாய்க்குள் திணித்தான்.

"இதை கடித்துக் கொள், நீயும் ரேப்பை என்ஜாய் பண்ணுவாய்"

அவன் அழுத்திய வேகத்தில் அந்த காப்ஸ்யூல் சற்று சிதைந்தது. அவள் நுனி நாக்கில் ஒரு தித்திப்பு பரவியது.

சபிதா பலம் கொண்ட மட்டும் அந்த மாத்திரையைத் துப்பினாள். ஆனால் அவள் உடலில் சரேலென ஒரு மாற்றம் ஏற்படுவதை அவளால் உணர முடிந்தது. தண்ணீரில் தூக்கிப் போட்டது போல் தரையிலேயே அவள் உடல் மிதந்தது. காற்றில் மிதக்கும் இறகுபோல் ஒரு உணர்வு அவள் நினைவு களை அலைக்கழித்தது.

பணியாதே, பணியாதே, பணியாதே என்று ஒரு புறம் உள்மனம் எச்சரிக்கை



செய்து கொண்டே இருந்த போதிலும் அவளுடைய எதிர்ப்பு குறைவதை அவளால் கவனிக்க முடிந்தது.

அமுதன் ஒரு வெற்றிப் புன்னகையுடன் அவள் உதடுகளை இரு விரல்களால் முதலில் கசக்கினான்.

சபிதாவிற்கு உணர்வு திரும்பிய போது தரை வெற்று முதுகில் சில்லிட்ட பார்வையை மறைத்திருந்த அடர்ந்த புகை சரேலென காற்றில் விலகி விட்டதுபோல் எல்லாம் தெளிவாயிற்று.

அமுதன் ஜெயித்து விட்டான்!

அவள் உடலின் ஒவ்வொரு அணுவும் வலித்தது.

தரையில் கால்கள் தேயும் சத்தம் கேட்டு இமைகளை திறந்தாள்.

அமுதன் நின்றிருந்தான். இடுப்பில் ஒரு லுங்கியை சுற்றியிருந்தான். மார்பை மூட வில்லை.

"ஹாய் சபிதா!"

சபிதா நினைத்திருந்தால் எழுந்து அவனை கோபத்தோடு தள்ளியிருக்க முடியும். அதனால் உடனடியாக எந்த லாபமும் இருக் காது. அடுத்த கணமே அவன் கை எப்படியும் ஓங்கி விடும். சபிதா அசையாமல் அவனை பார்த்தாள்.

"நீ ஏன் சட்டம் படித்துத் தொலைத் தாய்? உன் அழகுக்கு நீ ஒரு கிராமத்துப் பெண்ணாய் இருந்திருந்தால் உயிரோடாவது விட்டு தொலைத் திருப்பேன். இப்போது உன்னை வெளியே அனுப்பினால் எனக்கு

ஆபத்து." அமுதன் கையில் ஒரு தலையணை இருந்தது.

சபிதா அவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள்.

"கத்தியில்லை ரத்தமில்லை. வலிக்காமல் செத்துப போவாய்.

முகத்தில் வைத்து ஐந்து நிமிடம் அழுத்த மட்டும் அனுமதி கொடு போதும்"

"கற்பழிப்பை விட கொலைக்கு தண்டனை அதிகம்" - சபிதா உதடுகளை மெல்ல அசைத்துச் சொன்னாள்.

"லாயர் புத்தி போகவில்லை பார்" என்று அமுதன் சிரித்தான்.

"கொலையில் என்னை யாரும் தொடர்பு படுத்தமாட்டார்கள். ஏன் புத்திசாலி வக்கீலே, என்னவோ ஒரு கற்றுக்குட்டி கொலைகாரன் என்று என்னை நினைத்து விட்டாய்! நோ.. கற்பழிப்பு கொலை இரண்டு அனுபவமாகி விட்டது... ஜோதி என்று ஒரு பெண், சூர்யகலா என்று இன்னொரு பெண்... அந்த இரண்டு பேர் மட்டும் உன்னைப் போலத்தான் ரூல் எல்லாம் பேசினார்கள்.. இன்றைக்குக் கூவத்தில் குப்பையாகப் புதைந்து கிடக்கிறார்கள்... அழகாக முழு நீளத்திற்கு பாலிதீன் பையெல்லாம் போட்டுக் கட்டித்தான் எறிந்தேன்..."

"இல்லை... அவர்களை போலீஸ் வெளியே எடுத்து விட்டது. ஆனால், கற்பழித்து கொலை செய்தது நீ தான் என்ற ஆதாரம் இல்லாமல் போலீஸ் தவிக்கிறது!" - சபிதா இன்னும் அசையவில்லை. இன்ஸ்



பெக்டர் ரவிகுமார் சொன்ன பெண்களின் பெயர் ஜோதியும் சூர்யகலாவுமா?

"எப்படிக் கிடைக்கும்? தடயம் எப்படி கிடைக்கும்?" அமுதன் ஏளனமாக சிரித்தான். "நான்தான் ஒவ்வொரு காயையும் கவனமாக நகர்த்துகிறேனே... இன்றைக்குக் கூட உன்னை வழியில் ஏதோ ஒரு போஸ்ட் ஆபீஸ் வாசலில் பிக்அப் செய்ததற்கு காரணம் என்ன? உன் இருப்பிடத்தில் என்னையோ, என் இருப்பிடத்தில் உன்னையோ யாரும் பார்த்து விடக் கூடாது என்பதற்காகத்தான்.

அமுதன் இன்னும் ஓரடி முன்னேறி வந்தான்.

"இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறேனே கார்... அது கூட என் சொந்தக் கார் இல்லை! என் நண்பன் பெயரில் எடுக்கப் பட்டிருக்கும் வாடகைக் கார்...

"அதனால் எல்லாம் தப்பித்து விட முடியாது..."

"முழுவதும் நீ கேட்கவில்லையே! ஒரு வேளை கற்பழிப்போடு உன்னை வெளியே அனுப்பி, நீ வழக்கு தொடர்ந்தால் என்ன ஆவது என்று பக்காவாக கதையை செட்டப் பண்ணி விட்டுத்தான் வந்திருக்கிறேன்! எப்படி என்று கேளேன்.

"எப்படி?" சபிதாவின் உதடுகள் உலர்ந்து விட்டன.

"என் நண்பன் லிங்கன் என்னைப் போலவே குரல் மாற்றிப் பேசத் தெரிந்தவன் இந்நேரம் பக்கத்து போலீஸ் ஸ்டேஷனிற்கு

போன் செய்து என்னைப் போலப் பேசியிருப்பான். 'அமுதன் பேசுகிறேன், இன்ஸ்பெக்டர்! வாசலில் நிறுத்தியிருந்த என் மோட்டார் சைக்கிளைக் காணவில்லை' என்று சொல்லியிருப்பான். சப் இன்ஸ்பெக்டரை ஏற்கெனவே அட்ஜஸ்ட் செய்து வைத்து விட்டேன்...சன் இன்ஸ்பெக்டரிடம் கொடுப்பதற்கு -ஏற்கெனவே வண்டி தொலைந்தது பற்றி ஒரு புகார்க் கடிதம் எழுதி வைத்திருக்கிறேன். அதை லிங்கவிடமிருந்து வாங்கிப் போவார். என்னிடமிருந்து நேரில் வாங்கியதாகப் பதிவு செய்து கொள்வார். இத்தனை முன்யோசனைகளும் இப்போதைக்கு வீண் தான். நீ வெளியே போனால்தானே எனக்கு அந்த ரிஸ்க்!

அமுதன் தலையணையை அருகே கொண்டு வந்தான். அவள் மாத்திரையின் விளைவு சபிதாவிடம் இன்னும் தொடர்ந்திருக்கும் என்று நினைத்திருக்கலாம். சபிதா மாத்திரையின் பெரும்பகுதியைத் துப்பி விட்டது அவன் கவனத்தில் இல்லாமல் இருக்கலாம்.

இல்லையென்றால் இவ்வளவு தைரியமாக இவ்வளவு நெருக்கத்தில் தலையணையோடு வந்து நின்றிருக்க மாட்டான்.

"தாகமாக இருக்கிறது", என்று முனகினாள் சபிதா "தண்ணீர்"

"சாகப் போகிறவளுக்கு என்ன தாகம்?"

"ப்ளீஸ்... அமுதன்... அரை டம்ளர் தண்ணீர் இருந்தால் கூடப் போதும்" சபிதா மிகக் கெஞ்சினாள்.



அமுதன் நிமிர்ந்தான், "கடைசி ஆசை! குடித்து விட்டு சாகு," தலையணையைப் பக்கத்தில் எறிந்து விட்டு கிச்சனுக்குள் நுழைந்தான்.

தண்ணீர் குவளை எடுத்து தூய தண்ணீரை நிரப்பி அவன் திரும்பியதும் சபிதாவின் மீது முட்டினான்.

சபிதா எழுந்திருக்க முடியும், எழுந்து கிச்சன் வரை வர முடியும் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சபிதாவின் மீது மோதிய வேகத்தில் அவனுடைய கையிலிருந்த கண்ணாடித் தண்ணீர்க் குவளை தரையில் விழுந்து நூறாக சிதறியது.

சபிதா இரண்டு கைகளையும் அவன் மார்பின் பதித்துத் தள்ளினாள்.

அமுதன் தயாராக இல்லாததால், அப்படியே தரையிலிருந்து பெயர்க்கப்பட்டவன் போல் பின்புறம் எகிறி கிச்சன் மேடையில் பின் முதுகு மோத சரிந்து தரையில் விழுந்து, ஆத்திரத்துடன் பற்களைக் கடித்து எழுந்து சபிதாவின் மீது பாய்ந்த போது...

சபிதா இரண்டு கைகளிலும் கெட்டியாகப் பற்றியிருந்த கத்தி அவன் வயிற்றில் நேரே செருகியது.

இறைச்சியை சிறு துண்டங்களாக வெட்டுவதற்குப் பயன்படும் மிக கூரான, வலுவான கத்தி. அவனுடைய கிச்சனிலேயே இத்தனை நாள் சரியாகப் பயன்படாமல் வைக்கப்பட்டிருந்த கத்தி.

கத்தி செருகப்பட்டதும், அமுதன் முகம்

ஒரு கணம் அப்படியே உறைந்து போனது நம்ப முடியாமல் நின்று சபிதாவைப் பார்த்தான். தடுமாறி ஒரடிப் பின் நகர்ந்த போது, கத்தி அவனோடு சேர்ந்து நகர்ந்தது. சபிதாவின் கைகளிலிருந்து விடுபட்டது.

கீழே சிதறியிருந்த தண்ணீரில் அமுதனின் கால் பதிந்து வழுக்கி சரிந்து விட்டது. அமுதன் பிடிப்பைத் தேடி இரு கைகளையும் விரித்தபடி அந்த சமையலறைத் தரையில் பின் மண்டை ணங் என்று மோத, மல்லாந்தான். அடங்கினான்.

அதே கணத்தில் சபிதாவின் உடலில் இருந்த சக்தியெல்லாம் அந்தக் கணத்தில் உறிஞ்சி எடுக்கப்பட்டது போல், அவளும் மயங்கி கீழே விழுந்தாள்.




சபிதவிற்கு நினைவுகள் அலை அலையாகத் திரும்பின.

எங்கே இருக்கிறேன், நான்?

அவள் உடம்பில், தண்ணீர் பரவி வந்து, ஒரு ஈரத்தை நினைத்திருந்தது.

இது சமயலறை! அமுதனின் சமையல் அறை. சபிதா தலையைக் குலுக்கினாள். கனமான ஒரு வலி அவள் மண்டைக்குள் புரண்டாற் போலிருந்தது. அவள் கனவில் இருக்கிறாளா, நிஜத்தில் இருக்கிறாள என்று



புரிபட சில நிமிடங்கள் தேவைப்பட்டன.

உடல் எங்கும் வலித்தது.

சபிதா கையூன்றி எழுந்தாள்.

சமையலறை மேடையில் கையூன்றி தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள்.

சுற்றிலும் பார்த்தாள்.

அமுதனின் சமையலறை கலைந்து கிடந்தது. அமுதன் விழுந்த இடத்திலேயே கிடந்தான். திறந்து கிடந்த அவன் மேல் உடம்பில் அந்தக் கத்தி செங்குத்தாக நின்றது. ரத்தம் பூத்துக் கசிந்து உடலை நனைத்து தலையில் இறங்கிச் சென்றிருந்தது.

அந்தக் காட்சியைப் பார்த்ததும் சபிதாவின் உடல் விலுக்கென்று மின்சாரம் செலுத்தப்பட்டது போல் ஒரு முறை உதறியது.

அடிவயிற்றை சுருட்டி இழுத்தது.

கண்களை மூடிக் கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக மூச்சு சீர்பட்டது. நிதானமானது.

இப்போது கண்களைத் திறந்தபோது, அவளுடைய சக்தியெல்லாம் திரும்பி விட்டாற் போலிருந்தது.

அவசரப்படாதே... இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்? போலீஸிற்கு போன் பண்ணிக் கூப்பிடு, அவர்களிடம் நடந்த உண்மைகளை ஒன்று விடாமல் எடுத்துச் சொல்... அதற்கு முன...

சபிதா மண்டியிட்டு அமர்ந்து அமுதனின் மூக்கில் விரல் வைத்துப் பார்த்தாள். மூச்சு நின்றிருந்தது. மணிக்கட்டை எடுத்துப்

பார்த்தாள். நாடி ஓய்ந்திருந்தது.

மெல்ல நடந்து ஹாலுக்கு வந்தாள்.

வழியில் அவள் புடவை ஒரு குவியலாகவும், அமுதனின் மேல்சட்டை இன்னொரு குவியலாகவும் கிடந்தன. மிதிக்காமல் போனை நெருங்கினாள்.

எடுத்தாள். போலீஸ் எண்ணை டயல் செய்தாள். தொடர்பு கிடைக்க வில்லை. இன்ஸ்பெக்டர் ரவிகுமாரின் பிரத்யேக எண்ணை டயல் செய்தாள். அதுவும் போய்ச் சேரவில்லை. டயல் ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

சரெலென நினைவு வந்தது. இந்த போன் இயங்காது...! இதை இயக்க வைக்க ஒரு சங்கேத எண் இருக்கிறது என்று அமுதன் சொன்னான்... ஆனால், அந்த சங்கேத எண்ணை அமுதனிடமிருந்து இப்போது வாங்க முடியாது.

போலீஸிற்கு சொல்ல வேண்டுமானால், இந்தப் பண்ணை வீட்டை விட்டு அவள் முதலில் வெளியே போயாக வேண்டும்.

பிரதான சாலையை பிடித்து அங்கே ஒரு பொது தொலைபேசியைக் கண்டுபிடித்து வெளியேறுவது அவ்வளவு சுலபமாகவா இருக்கும்? வாட்ச் மேனைத் தாண்டி அவளால் எப்படி போக முடியும்?

ஆயாசமாகி உட்கார்ந்தாள்.

யோசிக்க யோசிக்க இது வேண்டுமென்றே அவளுக்காக ஏற்படுத்தித் தரப் பட்ட ஒரு திருப்பம் என்று தோன்றியது.



போலீஸைக் கூப்பிட்டு தகவல் கொடுத் தால்.

எத்தனை கேள்விகளுக்கு அவள் பதில் சொல்லியாக வேண்டும்? கோர்ட்டில் அவளைப் போலவே இல்லை அவளை விடவும் கூடுதலான ஒரு புத்திசாலி வக்கீலின் குறுக்கு விசாரணையை அவள் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஏன் போனாய்? அதெப்படி தனியே போக தைரியம் வந்தது, கற்பழிப்பை போலீஸில் சொல்லாமல் நீயே ஏன் அவனை குத்தினாய்? உன்னைக் கொலை செய்ய அவன் முயற்சி செய்தபோது தற்காப்புக்காகக் கொலை செய்ததாக இந்த நிகழ்ச்சி இல்லையே...!

ஒரு மனிதாபிமானத்தோடு தவித்த வாய்க்கு தண்ணீர் எடுத்து வரதானே அமுதன் சமையலறைக்குப் போனான்? கற்பழிப்பு நடந்ததாக சொல்லப்படும் ஹாலில் இந்தக் கத்தி இல்லையே! சமையலறைக்கு அவனைப் போக வைத்து அங்கே வந்து கத்தி எடுத்துக் குத்தியதில் ஒரு திட்டமிடுதல் இருக்கிறதே! இது உணர்ச்சி வேகத்தில் செய்த கொலை என்பதைவிட ஆத்திரத்துடன் திட்டமிட்டு செய்த கொலையாகத்தானே தோற்றமளிக் கிறது? எனவே இ.பி.கோ. சட்டம் செக்ஷன் 320 படி....

சபிதா தலையை உலுக்கிக் கொண்டாள். வேண்டாம் நான் குற்றவாளி யாக கோர்ட் படி ஏறத் தேவையில்லை!

இங்கே அமுதனுடன் நான் வந்தது எனக் கும், அவனுக்கும் மட்டும் தான் தெரியும்.

அவனே தான் வேறு இடத்தில் இருப்பதாக அழுத்தமாக வேறு ஏற்படுத்தியிருக்கிறான்.

அவன் செய்த அத்தனை முன்னேற்பாடுகளும் இப்போது அவனுக்கு எதிராகவே திரும்பி விட்டன.

சபிதா என்ன செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தாள். வாஷ்பேஷனில் முகத்தை நிறைய தண்ணீரை அடித்துக் கழுவிக் கொண்டாள்.

எட்டடி நீளத்திற்கு, இரண்டடி அகலத்திற்கு இருந்த மாபெரும் பாலிதீன் பையை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

***

**நா**ற்பது நிமிடங்கள் கழித்து சபிதா நிமிர்ந்தபோது, அவள் உடல் வியர்வையில் தெப்பலாக நனைந்திருந்தது. செய்து முடித்த காரியத்தைத் திருப்தியோடு ஒருமுறை மேற்பார்வையிட்டாள்.

அமுதன் ராட்சத பாலிதீன் கவருக்குள் அடைக்கப்பட்டிருந்தான். கால்கள் வழியே தலையணை உறை போல் செருகப்பட்டு இழுக்கப்பட்டு அந்த பாலிதீன் பை தலையையும், முகத்தையும் மூடிய பின் உச்சந்தலையருகே சுருக்கப்பட்டு முடிச்சிடப்பட்டிருந்தது. வெளிர் பச்சை நிற பாலிதீனைத் தாண்டி அமுதன் ஆரவாரமின்றி தெரிந்தான். ரத்தக் கறை பாலிதீன் பையை உள்ளேயிருந்து ஒட்டிப் பிடித்திருந்தது.

கவருக்குள் கிடந்த அமுதனின் வயிற்றில் இருந்து கத்தி உருவப்பட்டிருந்தது. அமுதனின் உடல்மீது அவள் கைரேகைகள் பதிந்திருக்கக்கூடும் என்று நினைத்த பகுதிகளையெல்லாம் கவனமாகத் துடைத்திருந்தாள்.



அமுதனுக்கு விடுதலை தந்த கத்தி. தனியே இன்னொரு பாலிதீன் கவரில் போட்டு முடிச்சிடப்பட்டிருந்தது.

சமையலறை, தண்ணீர் குவளை என்று எந்தெந்த இடத்தில் அவள் கைரேகைகள் பதிந்திருக்கலாமோ, ஒவ்வொரு இடமாக சுத்தம் செய்தாள்.

அடுத்தது ஹால். ஹாலில் அவளை அறியாமல் விரல் ரேகைகள் பட்டிருக்கக் கூடிய பகுதிகளைத் தேடித்தேடி ஈரத்தணி வைத்துத் துடைத்தாள்.

தன் உடைகளை அணிந்தாள். ரவிக்கை சிதைந்திருந்தது. ஆனாலும் புடவை முந்தானையை மார்பின் மீது போர்த்தாமல் இடுப்பிலேயே இன்னொரு சுற்று சுற்றி செருகிக் கொண்டாள்.

கீழே கிடந்த அமுதனின் பெரிய சட்டையை எடுத்து மேலே அணிந்தாள்.

அரையிருட்டில் காருக்குள் அமர்ந்திருப்பவரைப் பார்த்தால், அது அமுதன் என்ற சந்தேகம் வர வேண்டும். பையில் போடாமல் இருந்திருந்தால், அமுதனின் கால்களையோ, கைகளையோ பிடித்து உடலை இழுத்து வருவது சுலபமாய் இருந்திருக்கும். பாலிதீன் பையோடு இழுப்பது சற்று சிரமமாகத்தான் இருக்கப் போகிறது.

சபிதா வாசல் கதவைத் திறந்து வைத்தாள். காரை போர்ட்டிகோவிலிருந்து ரிவர்ஸ் எடுத்து கதவருகே அதன் பின்புறம் வரும்படி நிறுத்தினாள்.

விளக்குகளை எல்லாம் அணைத்து விட்டாள்.

அவள் உடலில் அங்கங்கே வலித்தது. ஆனாலும் வலியை மீறி ஒரு உற்சாகமான சக்தி ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது.

கோர்ட் வாசலில் நின்று பொருமிய அபிராமியின் அழுகை முகம் நினைவில் ஆடியது.

நீயும் ஒரு பெண் என்பதை மறந்து விட்டு, எனக்கு இப்படி ஒரு துரோகம் செய்து விட்டாயே...! உனக்கே இப்படி ஒரு நிலைமை வந்தால் தான், இன்றைக்கு நான் என்ன பாடுபடுகிறேன் என்று உனக்குப் புரியும்..!

அபிராமி, நீ அழுது கொண்டே கொடுத்த சாபம் பலித்து விட்டதடி உனக்கேற்பட்ட நிலைமை எனக்கு ஏற்பட்டு விட்டதடி, உன்னைப்போல் நானும் கோர்ட்டிற்குப் போனால், என்னைப் போல் ஒரு விதண்டாவாத வக்கீல் புகுந்து அமுதனைக் காப்பாற்றியிருக்கலாம். அதற்கு நான் இடம் கொடுக்கவில்லை, அபிராமி! அத்தனைப் பெண்களின் சார்பாவும் நானே தீர்ப்பு எழுதி விட்டேன்!

சபிதா சமையலறைக்குள் நுழைந்தாள்.

பாலிதீன் கவரில் ஒரு சரக்கு போல்



கட்டப்பட்டிருந்த அமுதனை இழுத்து வர ஆரம்பித்தாள்.

களைத்திருந்த அவள் உடலுக்கு அத்தனை சக்தி எப்படி வந்தது என்று அவளுக்கு அந்தக் கணத்தில் புரியவில்லை.

ஹால் வழியே பாலிதீன் கவர் தரையோடு தேய்த்து இழுக்கப்பட்டபோதுதான், சபிதா எதிர்பாராத அந்த விபரீதம் நிகழ்ந்தது.

ஹால் நடுவில் கலாச்சாரமாக வைக்கப் பட்டிருந்த மீன் தொட்டிகளில் ஒன்றின் அடிவாரத்தில் அமுதன் தலை மோதி விட்டது.

அந்த மர ஸ்டாண்ட்டு சின்னதாக நடுங்கி அப்படியே ஒருக்களித்தது. அதன்மீது இருந்த கண்ணாடித் தொட்டி கவிழ்ந்து சரிந்து ஹால் பூராவும் தண்ணீரை சிதறடித்துக் கொண்டு சிலீர் என்று நொறுங்கியது.

அந்த இரவின் அமைதியை அந்தத் தொட்டி உடைந்த ஒலி கலைத்தது.

சபிதா பதறினாள். அவள் காலில் ஏதோ மோதித் துள்ளியது.

ஐயோ மீன்கள்..! தண்ணீருக்கு வெளியே எறியப்பட்ட மீன்கள். இனி என்ன செய்யும்..!

சபிதா பரபரப்பாக ஹாலின் சிறு விளக்கைப் போட்டாள்.

தரையில் துள்ளும் மீன்களை அவசர அவசரமாக பொறுக்கி மற்ற மீன் தொட்டிகளுக்குள் போட்டாள். அவள் அத்தனை வேகமாக செயலிட்ட போதும் ஒரே ஒரு குட்டி மீன் மட்டும் அமுதனின் நெஞ்சின் மீது விழுந்து அடங்கிப் போயிருந்தது.

சபிதாவிற்கு அந்த மீனைப் பார்த்ததும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. விறைத்துப் போன அந்த மீனை எடுத்து முத்தமிட்டாள். "ஸாரிடா" என்றாள்.

கண்ணாடி உடைந்த ஒலி வாசலில் நின்றிருந்த வாட்ச்மேன் வரை எட்டியிருக்குமா? எப்படியிருந்தாலும் வீட்டிற்குள் வந்து விசாரிக்க அவனுக்கு அனுமதி உண்டா?

செத்த மீனை ஜன்னல் வழியே வெளியே போட்டாள். வாட்ச்மேன் வரவில்லை. தூரத்து கடல் சத்தம்தான் கேட்டது.

சபிதா கீழே சிதறியிருந்த கண்ணாடித் துண்டங்களை கவனமாகப் பொறுக்கினாள். ஒரு குப்பைக் கூடையைத் தேடிக் கண்டுபிடித்து அதில் போட்டாள். தரை துடைக்கும் கழி எடுத்து தரைத் தண்ணீரை துடைத்தாள்.

கவிழ்ந்த மீன் ஸ்டூலை நிமிர்த்தினாள்.

அமுதனை ஈரத்தின் மேலே இழுப்பது இப்போது சுலபமாயிருந்தது.

காரின் டிக்கிப் பகுதியில் அவனைத் திணித்தாள்.

அவனை இழுத்து வந்த பாதையை அடையாளம் காட்டுவது போல் ஈரமாய்த் தீற்றியிருந்த பகுதியை கவனமாகத் துடைத்தள்.

ஒவ்வொரு அறையாக நுழைந்து தன்னைப் பற்றிய எந்த அடையாளமும் விட்டு வைக்கவில்லையே என்று சரி பார்த்து விட்டு வெளியே வந்தாள்.



இரவு நீண்டிருந்தது. அவளுக்காகக் காத்திருந்தது.




வீட்டுக் கதவைப் பூட்டி, அந்த சாவியை காரின் பின் இருக்கை ஜன்னல் வழியே இருட்டில் எறிந்தாள். காரைக் கிளப்பினாள்.

மாலையில் அமுதனோடு காரில் ஏறிய போது எத்தனை நூறு கனவுகள்! பணமும், செல்வாக்கும், பதவியும், வசதியும் பற்றியே அத்தனை சிந்தனையும் ஒருமித்திருந்தது.

அவளுடைய அனுபவமின்மையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அமுதன் மீது இப்போது ஆத்திரப்பட்டு என்ன பயன்? இப்போது நரம்பைத் தளரவிடாமல், ஒரே பார்வையோடு இங்கிருந்து வெளியேற வேண்டும். வெறியேறி அவள் நினைத்ததை சாதிக்க வேண்டும்!

சபிதா ரிமோட்டை இயக்கினாள். கேட் திறந்து விட்டது. காரை வெளியே கொண்டு போனதும் ரிமோட்டை இயக்கினாள். கேட் மூடியது.

போலீஸிற்கு டெலிபோன் செய்ய முயற்சி செய்தேனே, அந்த ரிசீவரில் விரல் ரேகைகளைத் துடைத்தேனா? திடீரென ஒரு சந்தேகம் வந்தது.

காரை நிறுத்தினாள். யோசித்தாள். துடைத்த மாதிரியும் இருந்தது, துடைக்காத மாதிரியும் இருந்தது.

எப்படியாய் இருந்தாலும் மீண்டும் வீட்டிற்குள் போவதற்கு அவளுக்கு விருப்ப மில்லை.

வருவது வரட்டும், சந்தித்துக் கொள்ள லாம்.

சபிதா மீண்டும் காரைக் கிளப்பினாள்.

காரின் வேகத்தை சற்றுக் குறைத்து, முன் விளக்குகளை சட்சட் என்று அமுதனைப் போலவே நான்கு முறை அனைத்துப் போட்டதும், கண்கள் கூச வாட்ச்மேன் அவசரமாக குறுக்குச் சங்கிலியை நீக்கி சல்யூட் அடித்தான்.

அந்தப் பிரகாச வெளிச்சத்தில் கண்கள் கூசியிருக்க, காருக்குள் யார் உட்கார்ந்திருக் கிறார்கள் என்று அவனால் புரிந்து கொள்ள முடியாது. அப்படியே அரைகுறையாக பார்க்க முடிந்தாலும், அமுதனின் சட்டை அணிந்து சபிதா உட்கார்ந்திருந்தால், அவளை அமுதன் என்றே அவன் நினைத்திருப்பான்.

கார் சீறிக் கடந்தது, விரைந்தது.

மேலே நிலா மேகங்களுக்குப் பின்னே மறைந்திருந்தது. நட்சத்திரங்கள் கண்ணடித் தன.

சபிதா காரிலிருந்து இறங்கினாள். பாதி ஆளுயரத்திற்கு வளர்ந்திருந்த புதரை நீக்கி நடந்தாள். புதரும், காலடியில் நொறுங்கிய காய்ந்த இலைகளும் சலசலத்தன.

சபிதா நின்றாள்.



அந்த ஒதுக்குப்புறமான பகுதியில் எந்த நடமாட்டமும் இல்லை என்று பலமுறை நிச்சயித்துக் கொண்டபின் தான் காரிலிருந்து இறங்கியிருந்தாள். இருந்தாலும், அவ ளுடைய சிறு நடமாட்டம் அவளுக்கே படபடத்தைத் தந்தது.

புதரின் இருட்டுக்கு பின்னே மனிதக் கழிவுகளும் மிருகக் கழிவுகளும் காய்ந்து போன சரிவு, அந்த சரிவின் முடிவில், குடல் வரை துர்நாற்றத்தில் நிரப்பும் கூவம், நிலா வெளிச்சத்தில் கூவம் அழுக்கு சேறாகக் காட்சியளித்தது.

சபிதா காரின் இருந்த டிக்கிக் கதவைத் திறந்தாள் மடங்கிய நிலையில் இருந்த அமுதனை கவரோடு வெளியே இழுத்தாள். பாலிதீனின் சரசரப்பு காதில் பெரும் இரைச்சலாகக் கேட்டது.

சபிதா அந்த உடலை அப்படியே சரிவில் உருட்டினாள். சரசரவென்ற சத்தத்துடன் உருண்ட அந்த பாலிதீன் நீள் மூட்டை கூவத்தின் சேற்றுக்குள் வழுக்கி இறங்கியது. சேற்றில் சில காற்றுக் குமிழ்கள் தோன்றின. தயங்கின வெடித்தன.

சபிதா டிக்கியை மூடினாள்.

காரைக் கிளப்பினாள்.

காரை கடைசியில் நிராகரிப்பதற்கு வேறொரு இடம் தேர்ந்தெடுத்திருந்தாள்.

ஒரு மாபெரும் ராட்சஸனை தேவர்கள் கொன்று முடித்ததும் ஏற்படும் ஒரு அமைதி அவள் நெஞ்சில் நிறைந்திருந்தது.

கார் அங்கிருந்து சரிவுக்குள் நுழைந்து விரைந்தது.

சபிதாவின் இரவு இன்னும் நீண்டிருந்தது!




**செ**ன்ட்ரல் ஸ்டேஷன் கார் பார்க்கிங் பகுதியில் அன்றாடம் டோக்கன் கொடுக்கும் இளைஞன்தான் போலீஸிற்கு முதல் தகவல் சொன்னான்.

மூன்று நாட்களாக யாரும் வந்து எடுத்துப் போகாமல் ஒரு கார் அந்தப் பார்க்கிங் பகுதியை அடைத்துக் கொண்டு நிற்கிறது என்றுதான் சொன்னதும், போலீஸ் அந்தக் கார்பற்றி விசாரித்தது. அது வாடகைக் கார் என்று அறிந்து அந்த வாடகைக் கம்பெனியை அணுகியதும்...

"நாலு நாள் முன்னால் அந்தக் காரை விங்கன் என்ற கஸ்டமர் வாடகைக்கு எடுத்துப் போனார் என்று விவரம் தந்தது கம்பெனி.

விங்கன் திணறினான்.

"காரை நான் வாடகைக்கு எடுத்தது உண்மைதான்" ஆனால், எனக்காக எடுக்கவில்லை. என் நண்பன்தான் காரை எடுத்துப் போனான்.

"எந்த நண்பன்?"



சொல்லலாமா என்று யோசித்து, வேறு வழியில்லை என்று தீர்மானத்திற்கு வந்தான், விங்கன்.

"அமுதன்!"

அமுதன் என்றதும் போலீஸ் சுறுசுறுப்பானது.

"அமுதன் எங்கே?"

"என்னிடமிருந்து கார் வாங்கிப் போன பின் அமுதனை நான் பார்க்கவேயில்லை. அவன் ஆபிஸிற்கு போன் செய்தேன், அங்கேயும் அவன் வரவில்லை என்றார்கள்.

"அமுதனைக் காணவில்லையா?"

"அப்படிச் சொல்ல முடியாது; அவன் தனி மனிதன் அவனுடைய பிஸினஸைப் பார்த்துக் கொள்ள பொறுப்பானவர்கள் இருக்கிறார்கள். அவன் எங்காவது வெளியூர் போயிருக்கலாம் என்று நினைத்தேன்.

"உங்களிடமிருந்து காரை வாங்கிக் கொண்ட போது எங்கே போவதாக சொன்னார்?"

"அதையெல்லாம் என்னிடம் சொல்லும் பழக்கம் இல்லை" என்றான், விங்கன்.

அமுதன், அமுதன், அமுதன்! என்று டெலக்ஸ்கள் போலீஸ் அலுவலகங்களில் அலறின.

அவனுடைய அலுவலகத்தில் விசாரித்த போது, அமுதன் மூன்று நாட்களாக ஆபீஸ் வராதது பற்றி அவர்களுக்கும் குழப்பமாய் இருந்தது என்றும் ஆனால் போலீஸில் சொன்னால், அதற்காக அமுதன் கோபித்துக்

கொள்ளக் கூடும் என்றும் யோசனை செய்த தாக தலைமை அதிகாரி சொன்னார்.

"நான்கு நாட்களுக்கு முன்னால் இந்த போலீஸ் ஸ்டேஷனில் அமுதன் கொடுத்த ஒரு புகார் பதிவாயிகிருக்கிறது, சார்" என்று இன்ஸ்பெக்டர் ரவிகுமாருக்கு வேறொரு ஸ்டேஷனிலிருந்து போன் வந்தது.

"என்ன புகார்?" ரவிகுமார் ஆர்வ மானார்.

"அமுதனின் மோட்டார் சைக்கிள் திருடு போய்விட்டதாக அவர் ஒரு கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கிறார், சார்.

"எனக்கு முழு விவரங்கள் வேண்டும்... சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து அனுப் புங்கள்" என்றார் ரவிகுமார்.

சப் இன்னுபெக்டர் சங்கரன் அந்த புகாரின் பிரதியை ரவிகுமாரிடம் நீட்டிய போது, ரவிகுமாரின் விழிகளை சந்திக்க வில்லை.

"பதினைந்தாம் தேதி இரவு புகார் கொடுத்திருக்கிறார்" என்றார், ரவிகுமார்.

"இரவு பத்து மணிக்குப் பதிவு செய்திருக் கிறீர்களே... அமுதன் ஸ்டேஷனிற்கு வந்திருந் தாரா?"

"இ... இல்லை, சார்... அவர் கொஞ்சம் குடித்திருந்தார். அதனால் அவருடைய வீட்டிற்குப் போய் நானே இதை வாங் கினேன்.

"பதினைந்தாம் தேதி இரவு பத்து மணிக்கு அமுதனை அவர் வீட்டில் நீங்கள் சந்தித்தீர்கள்?"



"அ... ஆமாம் சார்..."

"அமுதன் ரொம்ப குடித்திருந்தாரா?"

இதென்னடா வம்பாகப் போயிற்று கோர்ட்டில் நடத்துவது போல் குறுக்கு விசாரனை நடத்த ஆரம்பித்து விட்டாரே இவர் என்று சப்இன்ஸ் பெக்டர் சங்கரன் சற்ற நெளிந்தார்.

"ரொம்ப குடிக்கவில்லை, சார்..."

"பொதுவாக அவர் மனநிலை எப்படி இருந்தது? கோபமாக இருந்தாரா, வெறுப் பாக இருந்தாரா?"

அப்படியெல்லாம் இல்லை, சார்... சாதாரணமாய்த்தான் இருந்தார்." அமுதனை அன்று பார்க்கவேயில்லை என்று எப்படிச் சொல்வது?

"ஸோ, பதினைந்தாம் தேதி இரவு பத்து மணிக்கு அப்புறம்தான் அமுதன் காணாமல் போயிருககிறார் என்று நாம் முடிவு செய்யலாம்" ரவிகுமார் சாதாரணமாகத்தான் சொன்னார். சப் இன்ஸ்பெக்டருக்குத்தான் தன் பொய்த், தகவல் காரணமாக ஏதாவது பிரச்னை வந்து விடுமோ என்று கலக்கமாக இருந்தது.

"அந்தக் காரை வாடகை கம்பெனியில் தர வேண்டாம்" என்றார், இன்ஸ்பெக்டர் ரவிகுமார். "பதினைந்தாம் தேதி இரவு பத்து மணிக்கப்புறம் அமுதன் ஏதோ ஒரு ரகசிய மான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். அப் புறம் ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு வந்து வண்டியை நிறுத்தி விட்டு காணாமல் போயிருக்கிறார். ரயிலில் ஏறி எங்காவது

போனாரா அல்லது காரை அங்கே விட்டுவிட்டு பஸ் பிடித்து வெளியூர் எங்காவது போய் விட்டாரா தெரியவில்லை. ஆனால் அவர் எதோ தப்பான காரியத்தில் ஈடுபட்டிருப்பார் என்று தோன்றுகிறது. அவரைப் பற்றி அந்தக் காரில் ஏதாவது துப்பு கிடைக்கலாம்."

கார், தடயவியல் கூடத்தில் வைத்து ஆராயப்பட்டது. தடயவியல் நிபுணர் சாந்தாராம்தான் ஆராய்ந்தார்.

"காரின் அடியில் இயந்திரத்தில் இந்தச் செடி சிக்கியிருந்தது" என்று சாந்தாராம் ஒரு செடியை மேஜை மீது வைத்தார். "இது ஒருவகைக் காட்டுச் செடி, நம் ஊரில் இது கூவம் கரையோரம் இருக்கும். குறிப்பாக தொலைக்காட்சி நிலையம் இருக்கிறதே அந்த சாலையில் கூவத்தின் கரையோரம் இந்தச் செடியை நீங்கள் நிறைய பார்க் கலாம்"

இன்ஸ்பெக்டர் ரவிகுமார் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"ஆறு மாதத்திற்கு முன்னால், ஜோதி, சூர்யகலா என்று இரண்டு பிணங்களை கூவத்திலிருந்துதான் எடுத்தோம், சாந்தா ராம். அமுதனின் கார் அங்கே போயிருக் கிறது என்றால், கூவத்தில் இன்னொரு பிணம் கிடைக்கலாம்."

நான்கு மணி நேரத் தீவிர தேடுதலுக்குப் பிறகு, கார் நிறுத்தப்பட்ட இடம் கண்டு பிடிக்கப்பட்டது.

செடியையும் சேற்றையும் சேர்த்து



மிதித்த ஷூக்களின் தடங்களின் அளவுகள் குறித்துக் கொள்ளப்பட்டன.

கார் ரிவர்ஸ் எடுத்து நிறுத்தப்பட்ட அடையாளம் வைத்து, அந்தப் பகுதியில் கூவத்தைப் புரட்டிப் பார்க்க கருவிகள் கொண்டு வரப்பட்டன.

வெளிர்பச்சை நிற பாலிதீன் மூட்டைத் தட்டுபட்டதுமே, இன்ஸ்பெக்டர் ரவிகுமார் பரபரப்பானார்.

"இப்படித்தான் ஜோதியும், சூர்ய கலாவும் கிடைத்தார்கள். இன்றைக்கும் ஒரு பெண் கிடைக்கப் போகிறாள்"

அந்த மூட்டை முழுவதுமாக வெளியே எடுக்கப்பட்டது. தண்ணீர் பீய்ச்சப்பட்டு அதன் மீது அப்பியிருந்த சேறு நீக்கப் பட்டதும்.

ஒரு பெண்ணின் பிணத்தை எதிர்பார்த் திருந்த ரவிகுமாருக்கு ஆச்சரியம் காத்திருந் தது.

"இது அமுதன் இல்லே?" என்றார் திகைத்து.




என் மேல் நிச்சயமாகக் கோபம் இல்லையே?" என்றாள், சபிதா.

அவள் அமர்ந்திருந்த பிரம்பு நாற் காலிக்கு நேரெதிர் நாற்காலியில் அமர்ந்

திருந்த அபிராமியின் முகத்தில் இன்னமும் புன்னகை திரும்பவில்லை.

"காப்பி சாப்பிடுங்கள் சார்..." என்று இரண்டு கோப்பைகளில் காஃபியோடு வந்து சேர்ந்தாள் அபிராமியின் அம்மா.

"உங்கள் பேரில் கோபித்துக் கொண்டு என்ன ஆகப் போகிறது? நீங்கள் உங்களை தொழிலைச் செய்தீர்கள் கோர்ட்டு தண்டனையிலிருந்து அமுதனை உங்களால் காப்பாற்ற முடிந்தது.

ஆனால் கடவுளின் தண்டனையிலிருந்து காப்பாற்ற முடியவில்லை..." என்று அவள் சொன்னபோது சபிதா தன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"அன்றைக்கு அது எனக்கு முதல் கேஸ் என்பதால், அபிராமியைக் கொஞ்சம் பந்தாடி விட்டேன். அதற்காக நான் அப்புறம் ரொம்ப வருத்தப்பட்டேன்... இனிமேல் எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும், ஒரு ரேப் கேஸை எடுத்து கொள்வதில்லை என்று தீர்மானித்தும் உங்களை பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தோன்றியது.

சபிதா காஃபியைக் கொஞ்சமாக உறிஞ்சினாள்.

"அப்புறம் இதை நீங்கள் மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று ஒரு நீள்சதுரக் கவரை அவர்களிடம் நீட்டினாள், சபிதா.

"என்ன இது?"

முதல் வழக்கிற்கு அமுதன் எனக்குக்



கொடுத்த பணம், இது நியாயமாக உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம்.

அவனுடைய ஒரு பைசா கூட எங்களுக்கு வேண்டாம்" என்றாள், அபிராமி, முகம் சிவக்க.

"அப்படியானால் இந்தப் பணத்தை அபலைப் பெண்களைப் பராமரிக்கும் ஒரு இல்லத்திற்கு நீங்களே அனுப்பி விடுங்கள்" என்று எழுந்தாள், சபிதா.




இன்ஸ்பெக்டர் ரவிகுமார் குந்தி உட்கார்ந்திருந்த அவருக்கு எதிரில் இரண்டு ஷுக்கள் வைக்கப்பட்டிருந்தன. சேறும், சகதியுமாக அப்பிய ஷுக்கள்!

"இந்த ஷுக்களை சுத்தம் செய்ய வேண்டாம். அப்படியே ஒரு கவரில் போட்டுக் கொடுங்கள். சாந்தாராம் ஆராயட்டும்" என்று சொல்லி அவர் எழுந்தபோது பக்கத்தில் நிழலாடியது. திரும்பினார், முகம் மலர்ந்தது.

"ஹலோ, சபிதா நீங்களா?"

சபிதா கார்டன் ஸாரியில் புத்துணர்ச்சியோடு இருந்தாள்.

"குட்மார்னிங் இன்ஸ்பெக்டர் சார்"

"என்ன இந்தப் பக்கம்?" இன்ஸ்பெக்டர்

ரவிகுமார் தன் தொப்பியை சரி செய்து கொண்டார்.

"அமுதன் கொலை பற்றி ஏதாவது உங்களுக்குத் துப்புக் கிடைத்திருக்கலாமோ என்று ஒரு ஆசை இந்தப் பக்கம் உங்கள் ஜீப் நிற்பதைப் பார்த்ததும், மொபெட்டை நிறுத்தி விட்டு வந்தேன்"

"பெரிதாக எந்த பிரேக்கும் கிடைக்க வில்லை. அன்றைக்கு இங்கே காரைக் கொண்டு வந்து நிறுத்தியவன் பயன்படுத்திய ஷூக்களைக் கூட கூவத்தில் எறிந்திருக்கிறான் போலிருக்கிறது. அதைத்தான் கண்டு பிடித் திருக்கிறோம். ஃபாரான்ஸிக் லேபில் வைத்து ஆராய்ச்சி செய்தபின் இந்த ஷூக்கள் வழக் கிற்கு உபயோகமாக இருக்குமா, இருக்காதா என்று புரியும்"

இருவரும் நடந்தபடி பேசினார்கள். வேற ஏதோ பேசிக்கொண்டிருந்த ரவிகுமார் வெகு சரேலென்று அந்தக் கேள்வியை அவள் மீது எறிந்தார்.

"நீங்கள் கடைசியாக அமுதனை எப்போது சந்தித்தீர்கள்?"

"அமுதன் செத்துப்போன தினத்தில்" என்றாள். சபிதா, எந்த அதிர்வும் காட்டாமல்.

ரவிகுமாரின் முகத்தில் ஆர்வம் வந்தது.

"சொல்லவேயில்லையே" என்றார்.

"நீங்கள் கேட்கவேயில்லையே" என்றாள், சபிதா.

"அன்று மாலை என்னைப் பார்க்க வேண்டும் என்றான். ஏழு மணி சுமாருக்குப் பார்த்தான். காரில் உட்கார்ந்து கொஞ்ச நேரம் பிஸினஸ் பேசினான். அப்புறம் போய் விட்டான்"



"காரில் என்றால்?"

"போலீஸ் கண்டுபிடித்திருக்கிறதே ஒரு கார். அந்தக் காரில்தான் அமுதன் வந்திருந் தான். போஸ்ட் ஆபீஸ் வாசலில் ஏற்றிக் கொண்டான். அவனுடைய இரண்டு நண்பர் களைப்பற்றி ஒட்டிக் கொண்டே சொன் னான். அவர்கள் அவனுடன் பார்ட்னர்களாக இருந்து கொண்டே, அவனை ஏமாற்றிக் கொண்டிருப்பதாக சொன்னான். அவர்களை பார்ட்னர்ஷிப்பிலிருந்து கழற்றிவிட லீகலாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்ப தற்காகத்தான் என்னை வரச் சொல்லி யிருந்தான். என்னுடன் அமுதன் பேசுவது பார்ட்னர்களுக்குத் தெரியக்கூடாது என்பதற் காகத்தான் என் வீட்டிலோ, அவன் ஆபீஸிலோ இந்த சந்திப்பை வைத்துக் கொள்ளவேண்டாம் என முடிவு செய் திருந்தான்"

"இருவரும் எங்கே போனீர்கள்?"

"காரில் ஒரு ரவுண்டு வந்து விட்டு நான் இறங்கி விட்டேன்... அவன் தனியே தான் போனான்"

"எங்கே போவதாக சொன்னான்?"

"நண்பர்களைப் பார்க்கப் போவதாகத் தான் சொன்னான். எங்கே என்று நான் கேட்கவில்லை"

பேசிக் கொண்டே ஜீப்பை நெருங்கி விட்டார்கள்.

"சபிதா, ஒரு பத்து நிமிடம் எனக்காக ஒதுக்க முடியுமா?"

"என்ன சார்?"

ரவிகுமார் சின்னதாக ஒரு வெட்கப் புன்னகை காட்டினார்.

"இன்றைக்கு எனக்கு வெட்டிங் டே. பெண்டாட்டிக்கு ஒரு சின்ன பரிசு வாங்க வேண்டும். கூட வந்து செலக்ட் பண்ணித்தர முடியுமா?"

"ஒய் நாட்?" என்று சபிதா புன்னகைத்தாள்.

மவுண்ட்ரோடில் சற்று உள்ளடங்கிய முச்சந்தியில் அந்த பிரம்மாண்டமான இசைக் கடை இருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட ஆடியோ சிஸ்டங்களில் இசை நிறைந்து வழிந்தது.

"யூ லைக் மியூஸிக்?" என்றார், ரவிகுமார்.

"லைக் மட்டும் இல்லை. லவ்!" என்றாள் சபிதா.

"சின்ன வயதிலிருந்தே இசை பிடிக்கும். ஆனால் என் ரசனை பெரும் பாலும் சினிமாப் பாடல்கள்தான். முதலில் விஸ்வநாதன் ராமமூர்த்தி. இப்பொழுது இளையராஜா!"

"எனக்கும் இசைப் பைத்தியம்" என்றார் ரவிகுமார்.

"இந்தத் தொழிலில் மனது இறுக்க மாகிப் போகிறது. பெரும்பாலான சமயம் ரவுடிகளுடனும், அயோக்கியர்களுடனும் தான் பழக வேண்டியிருக்கிறது. நானே ஒரு ரவுடியாக மாறி விடுவேனோ என்று கூட எனக்கு பயம் உண்டு. என்னை ரிலாக்ஸ் பண்ணிக்கொள்ள இசையை விட உன்னத மான வேறு விஷயத்தை நான் இன்னமும் கண்டு பிடிக்கவில்லை! என் ஒய்ஃபிற்கும் இசைபிடிக்கும். ஆனால் என் அளவு பைத்தியமில்லை"



"பின்னே மனைவிக்குப் பரிசளிக்கத் தானே காஸெட் வாங்குவதாகச் சொன்னீர் கள்?"

"அவளுக்காக வாங்கினாலும் நான் தானே கேட்கப் போகிறேன். அதனால் எப்போதுமே என் ரசனைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறேனே என்றுதான் உங்களை அழைத்து வந்தேன்"

சபிதா அங்கிருந்த ஆடியோ கேஸட் களைப் புரட்டினாள்.

"வீட்டில் ஐநூறு கேஸட் போல இருக்கிறது, சபிதா உங்களுக்கு ஏதாவது வேண்டுமானாலும் வந்து எடுத்துப் போகலாம்"

"ஒருநாள் வருகிறேன்" என்றாள், சபிதா.

ரவிகுமாருக்கு நான்கு கேஸட்கள் பொறுக்கி எடுத்தாள்.

"சபிதா... அமுதனோடு கடைசியாகப் பேசியிருப்பவர் என்பதனால் உங்களிடம் கேட்கிறேன்... அமுதனே யார் கொலை செய் திருக்கமுடியும் என்று நினைக்கிறீர்கள்?"

"அது போலீஸ் வேலை... என்று சிரித் தாள், சபிதா.

"குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டியது எங்கள் வேலை, விடுவிக்க வேண்டியது உங்கள் வேலை இல்லை?"

ரவிகுமார் சாதாரணமாகத்தான் கேட்டார். சபிதாவின் முகத்தில் சிரிப்பு உறைந்தது.

"சும்மா வேடிக்கைக்காக சொன்னேன் என்று சமாதானமான புன்னகை புரிந்தார், ரவிகுமார்.




"நீங்கள் எத்தனை நூறாயிரம் தடவை கேட்டாலும், எங்கள் பதில் அதேதான். தெரியாது, தெரியாது, தெரியாது!"

லிங்கன் சொன்னான். அதே பதிலை பிடிவாதமாக மகேந்திரனும் சொன்னான்.

இன்ஸ்பெக்டர் ரவிகுமார் சலிப்படையாமல் மீண்டும் கேள்வியை அமைத்தார்.

"அன்றைக்கிரவு அமுதன் எங்கே போனான், யாரைப் பார்க்கப் போனான் என்று நிச்சயமாக உங்களுக்குத் தெரியாது?"

"இப்பொழுது தானே சொன்னோம் தெரியாது"

"உடனடியாக நினைவுக்கு வராமல் இருக்கலாம். திடீரென்று நினைவு வரலாம்... வந்தால் எனக்கு மறக்காமல் சொல்லுங்கள்" என்று ரவிகுமார் எழுந்தார்.



சபிதா சாப்பிட ஆரம்பித்த நேரம் தொலைபேசி ஒலித்தது.

"சபிதா, என்னை நினைவிருக்கிறதா? மறுமுனைக் குரலில் லேசான எகத்தாளம்.

"யார்?"

"லிங்கன், அமுதனின் நண்பன்..."

"என்ன வேண்டும்?"

"உனக்குத்தான் வேண்டும். என்னிடமிருக்கும் சில போட்டோக்கள்"

"என்ன உளறுகிறாய்?" சபிதாவின் குரலில் கோபம் சேர்ந்தது.

"பதினைந்தாம் தேதி நீ எங்கே போனாய், இரவு யாருடன் இருந்தாய். என்ன செய்தாய் என்று அத்தனை விவரமும் என்னிடம் போட்டோவாக இருக்கிறது"

"......" பேத்தல்

"தான் அனுபவிப்பதை புகைப்படம் எடுத்து ஆல்பத்தில் சேர்த்துக் கொள்வது அமுதனின் வழக்கம். ஆட்டமாடிக் கேமிரா எடுத்த புகைப்படங்களைப் பார்க்க உனக்கு ஆர்வம் இல்லையா?"

சபிதாவின் மூச்சு ஒருசில கணங்களுக்கு நின்று போனது.

"ஹலோ... ஹலோ..." என்று மறுமுனை குரைத்ததும் தான் சுயநினைவுக்கு வந்தாள்.

"அவசரப்படாதே... நாம் வியாபாரம் பேசலாம்" என்றாள் சபிதா.

"எங்கே? எப்போது?"

"நீ சொல்"

"அதே கெஸ்ட் ஹவுஸ் இன்றிரவு"

"வேண்டாம்" என்றாள், சபிதா, அதை விட கலபமாக எனக்குத் தோன்றுவதை நான் சொல்கிறேன்.

"என்ன?"

"காரில் சந்திப்போம்" என்றாள், சபிதா.

சபிதா கறுப்பு நிற சுரிதார் அணிந்திருந் தாள். மிகமிக மெல்லிய வரிகளாக ஓடிய வெள்ளைக் கோடுகள் தூரத்திலிருந்து பார்த்தால் புலப்படாது.

தன் ஹேண்ட்பேக்கைத் திறந்து எல்லாம் எடுத்துக் கொண்டாயிற்றா என்று சபிதா ஒருமுறை சரிபார்த்துக் கொண்டாள்.

'நீ செய்வது நியாயம்தானா?' என்று அவளுக்குள்ளிருந்து ஒரு குரல் ஒலித்தது.

ஒரு கணம், ஒரே ஒரு கணம் அந்தக் குரல் அவளைத் தடுமாறச் செய்தது. கண்களை மூடிக் கொண்டு மனதை இறுக்கி, செருப்புகளை அவள் அணிந்த நேரம் தொலைபேசி ஒலித்தது.

லிங்கன் தானா?

போய் ரிசீவரை எடுத்தாள்.

"ஹாய் குரங்குக் கட்டி"

பரசுராம்! அமெரிக்காவிலிருந்து அவளுடைய பரசுராம்.

"ஹாய்" என்றாள் உலர்ந்த குரலில்.

"ஏய்... என் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருக்கிறாய். ரிலாக்ஸ்... நான் உனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமான செய்தி ஒன்று சொல்லப் போகிறேன்"



என்றது பரசுராமின் படு உற்சாகக் குரல்.

தன் பாரத்தை அவன் மீது ஏற்றுவது எந்த விதத்தில் நியாயம்?

"என்ன குட் நியூஸ்? உனக்கு கல்யாணம் நிச்சமாகி விட்டதா?" என்றாள், சபிதா, செயற்கையாக சிரித்து.

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தயாராய் ஒரு ஒரு முட்டாள்தான் இருக்கிறாள். அவளும் இந்தியாவில் இருக் கிறாள். இங்கே எப்படி நிச்சயமாகும்?"

"பின்னே?"

"இன்றிலிருந்து முப்பதாவது நாள்... ஜஸ்ட் தர்ட்டி டேஸ் விரல் விட்டு எண்ணிக் கொள்..."

"முப்பதாவது நாள் என்ன?"

"முப்பதாவது நாள் நான் இந்தியாவில் இருப்பேன். இரண்டு மாத லீவில் வருகிறேன், கண்மணி. நானும் நீயும் சுற்றோ சுற்று என்று சுற்றப் போகிறோம்!"

ராட்சத பனிப்பாறையை எடுத்து அவள் மண்டையில் போட்டு உடைத்தாற் போல் இருந்தது.

'பரசுராம், வராதே... வேண்டாம், இப்போது வராதே!'

"சபிதா...? என்ன சத்தத்மையே காண வில்லை?"

"சொல்லுடா..." என்றாள், குரலில் போலியான உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு..

"உனக்கு இங்கேயிருந்து என்ன வாங்கி

வரட்டும்?"

"நீ வந்தால் போதும், பரசுராம்"

"நான் வந்ததும் கடன் பாக்கியையெல்லாம் கழிக்க வேண்டும்... மறந்து விடாதே!"

"ம்ம்..."

"நான் உனக்கு இவ்வளவு சந்தோஷ சேதி சொல்கிறேன்... நீ எனக்கு என்ன சேதி சொல்லப் போகிறாய்?"

"இன்றைக்கு ஒரு முக்கியமாக காரியத்துக்குப் போகிறேன் பரசு... அதில் எந்த பிரச்னையும் இல்லாமல் வெற்றி கிடைக்க வேண்டும் என்று வாழ்த்து..."

"ஹாய்... எப்போதிலிருந்து இந்த செண்டிமெண்ட்யெல்லாம்?"

"வித் ஆல் மை லவ் சொல்கிறேன்... உனக்கு எல்லாக் காரியத்திலும் வெற்றிதான், சபிதா!"

சபிதாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

"தேங்க்யூடா..." என்று ரிசீவரை வைத்து விட்டாள்.

பரசுராம், என்னை மன்னித்து விடு. இன்னும் ஒரு வாக்கியம் போனில் பேசியிருந்தாலும் நான் அழுதுவிடுவேன்.

சபிதா அவளும் அவசரமாக தன் வீட்டை விட்டு வெளியேறினாள்.

பெசன்ட் நகர் கடற்கரைச் சாலையில் சற்று ஒதுக்குப்புறமாக நின்றிருந்தது அந்த பியட்.

சபிதாவின் கால்கள் தளர்ந்திருந்தன.



காயாத களிமண்ணால் செய்தது போல் கால்கள் மடங்கின.

நின்றாள், கால்களுக்கு சக்தி சேர்த்தாள். திடமான மனதுடன் அந்த பியட் நோக்கி நடந்தாள்.

பின் கதவைத் திறந்து ஏறினாள்.

"ஹலோ" என்றாள்.

முன் இருக்கைகளில் வீற்றிருந்த லிங்கன் மற்றும் மகேந்திரன் இருவரும் திரும்பி உட்கார்ந்தனர்.

"போட்டோக்களை நான் பார்க்கலாமா?" என்றாள், சபிதா.

"முதலில் பேரம் படியட்டும்" என்றான், லிங்கன்.

"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், உங்களிடம் போட்டோக்கள் இருப்பதாகவே நான் நம்பவில்லை. அன்றைக்கு அமுதன் என்னைப் பார்க்க வந்தபோது, தன் குரலில் பேசச் சொல்லி லிங்கனிடம் சொன்னதை வைத்துக் கொண்டு அன்று அமுதன் என்னுடன் தான் இருந்திருப்பார் என்று நீங்களாக தீர்மானம் பண்ணியிருப்பீர்கள்... அமுதனின் பிணம் கிடைத்ததும், எனக்கு அதில் தொடர்பு இருக்கும் என்று தீர்மானித்து விட்டீர்கள். போட்டோ கிடைத்தது என்று சொல்வதெல்லாம் வெறும் புரளி..."

சபிதா சொல்லி முடிக்கும் வரை லிங்கன் பொறுமையாக இருந்தான். அப்புறம் தன் பையிலிருந்து ஒரு வெள்ளை கவரை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அதில் ஒரே ஒரு புகைப்படம் இருந்தது.

குறைவான வெளிச்சத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் போல் தெளிவில்லாமல் மங்கலாக இருந்தது அவன் தன் பார்வையை சற்றுக் கூர்மையாக்கிப் பார்த்தாபோது அமுதனின் வெற்று முதுகு தெரிந்தது. அவனுடைய வலது தோளுக்கு மேலே இமைகள் மூடிய நிலையில் இருந்தது.

*சபிதா!*

"போதுமா?"

"மற்ற புகைப்படங்கள் எங்கே?" சபிதா கேட்டாள்.

"மொத்தமாக எவ்வளவு தருவாய்?"

"நீங்கள் நினைப்பது போல் நான் பணக்காரி இல்லை. என்னிடம் அதிக வசதிகள் கிடையாது."

"குட்! ஆனால், நீ அமுதனின் வக்கீலாக இருந்திருக்கிறாய்... அந்த வகையில் நீ எங்களுக்கு உதவ முடியும்"

"என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்னிடம்?"

"அமுதன் ஒரு உயில் எழுதி உன்னிடம் கொடுத்து விட்டுப் போனதாக நீ சொல்ல வேண்டும்"

"உயிலா?"

"ஆமாம்... அமுதனின் முக்கியமான பிஸினஸ் எல்லாம் எங்கள் இரண்டு பேருககும் பிரித்து எழுதி வைத்திருப்பதாக அந்த உயில் அமைய வேண்டும்."

"உயில் என்றால், கையெழுத்து



வேண்டுமே..." சபிதா தன் ஹேண்ட் பேக் திறந்து ஒரு சிறுபாக்கெட் எடுத்தாள். திறந்த ஒரு சூயிங்கம் எடுத்து வாயில் போட்டாள். பாக்கெட்டை முன் இருக்கை பக்கம் இயல்பாக நீட்டினாள்.

லிங்கனும், மகேந்திரனும் ஆளுக்கொரு சூயிங்கம் எடுத்துக் கொண்டனர்.

"அமுதனின் கையெழுத்து எப்படி போட வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்றான், லிங்கன்.

"அதற்கு பதிலாக அத்தனை போட்டோக்களும் என்னிடம் கொடுக்கப்படுமா?"

"யெஸ்!"

"நாளைக்கு இதே நேரம் உயில் காப்பி யோடு இங்கு சந்திக்கிறேன். இந்த ஒரு புகைக்படம் மட்டும் என்னிடம் இருக் கட்டும்" என்று சபிதா காரிலிருந்து இறங் கினாள்.

இருட்டில் நடந்தாள்.

கார் புறப்படும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்க்கவில்லை. லிங்கன் சொன்னது உண்மைதானா? அமுதன் தன் பண்ணை வீட்டில் தானியங்கி கேமிரா வைத்து புகைப்படங்கள் எடுப்பது வழக்கம் தானா? ஆனால் புகைப்படத்தின் கோணத்தை வைத்துப் பார்த்தால் ஹாலின் அந்தப் பகுதியை மட்டும்தான் அது தொடர்ந்து படம் எடுக்கும் என்று தோன்றியது. சமையலறையில் அவளுக்கும், அமுதனுக்கும் நடந்த போராட் டத்தை அது புகைப்படம் எடுத்திருக்க முடியாது. அவன் உடலை அவள்

ஹால் வழியே இழுத்து வந்த போது இயக்கியிருந்தால் ஒருவேளை புகைப்படத்தில் அதுவும் சிறைப்பட்டிருக்கலாம்.

அந்தப் படத்தை சுக்கு நூறாகக் கிழித்து நடந்து கொண்டே காற்றில் பறக்க விட்டாள்.

பிரதான் சாலைக்கு வந்து ஆட்டோ பிடித்த போது, மனதில் ஒரு அமைதி இருந்தது.

ஆட்டோ அடையாறு சிக்னல் அருகே வந்தபோது, அங்கு சிறு சலசலப்பு.

போலீஸ் குடையை சாய்த்து ஒரு பியட் மோதி நின்றிருந்தது.

ஆட்டோவிலிருந்து பார்த்தாள்.

காரின் கண்ணாடி வழியே லிங்கன் தெரிந்தான். ஸ்டியரிங்கில் தலை கவிழ்ந்திருந்தான்.

பக்கத்து இருக்கையில் மகேந்திரன் சரிந்து கிடந்தான். போலீஸ் வரும் விபத்தில் மரணம் என்று முதலில் நினைக்கும். போஸ்ட் மார்ட்டம் செய்யும் போது, சாப்பிட்டு ஐந்து நிமிடத்தில் தாக்கக் கூடிய ஒரு சயனைடு கலந்த சூயிங்கம் இருவருடைய வாய்களிலும் கிடைக்கலாம். மரணம் விபத்தினாலா, சயனைடினாலா என்ற சிறு விவாதம் இருக்கும்.

சபிதாவின் உதடுகளில் மெல்லிய புன்முறுவல் தோன்றியது.

"ஆக்ஸிடெண்ட்மா" என்றான், ஆட்டோக்காரன்.



"ஆமாம்... ஆனால், நிறுத்தாமல் போ." என்றாள் சபிதா.

லிங்கனிடம் அவளிடம் கொடுத்தது போக அவளுடைய வேறு போட்டோக்கள் இருந்தால்?

இருந்தால் போலீஸின் கையில் அது கிடைக்கட்டும் போலீஸ் அவளைத் தேடி வந்தால் அவள் அத்தனை உண்மைகளையும் சொல்லி விடத்தயாராய் இருந்தாள்.

கடவுளே!

நான் உடனே போலீசில் சிக்க வேண்டும் என்று நீ தீர்மானித்தால் அப்படியே செய்.

ஆனால் நானாகப் போய் சரணடையப் போவதில்லை!

"ஆட்டோவை அன்பு இல்லத்துக்குத் திருப்புப்பா."

அந்த இரவு நேரத்தில் அவளை அங்கே பார்த்து ஆச்சரிய சந்தோஷம் காட்டினார் பெரியவர்.

"என்னம்மா இந்த நேரத்தில்?"

"உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் போல் ஒரு திடீர் ஆசை... இன்றிரவு நான் இங்கேயே தங்கட்டுமா, தாத்தா?"

பெரியவர் தாடியை ஒரு கையால் வருடினார். சபிதாவின் தலையை இன்னொரு கையால் வருடினார்.

"இது உன் வீடும்மா, என்கிட்டே ஏன் பர்மிஷன் கேட்கிறாய்?"

சபிதா அன்றிரவு அவள் வளர்ந்த அன்பு

இல்லத்தில் அமைதியாக நிம்மதியாகத் தூங்கினான்.




சபிதா அழைப்புமணி பொத்தானை அழுத்தினாள்.

சில வினாடிகள் பொறுத்து கதவு திறந்தது. திறந்தவர் இன்ஸ்பெக்டர் ரவிகுமார்.

லுங்கியும், கட்பனியனுமாக இருந்தவர் சபிதாவைப் பார்த்ததும் ஆச்சரியமானார்.

"அடடே வாங்க. வாங்க" என்று பரபரப்பானார். உள்ளே திரும்பி மனைவிக்குக் குரல் கொடுத்தார்.

மஞ்சள் பூசிய முகமும் வட்டப்பெரும் பொட்டுமாக நெற்றியில் குங்குமம் வைத்திருந்த அவர் அமனைவி மகாலட்சுமி போல் இருந்தார்.

"என்ன அதிசயம்!" என்றார் ரவிகுமார்.

"சும்மாதான் வந்தேன்" என்றாள் சபிதா. "அமுதன் செத்தான்... பின்னாலேயே அவனுடைய இரண்டு நண்பர்களுடம் கூட செத்து விட்டார்களே! போலீஸ் எவ்வளவு தூரம் கண்டு பிடித்திருக்கிறது என்று தெரிந்து கொண்டு போகலாமே என்று வந்தேன்.



ரவிகுமார் ஒரு சட்டையணிந்து வந்து எதிரே அமர்ந்தார்.

"யூ நோ ஸம்திங்?" சபிதாவை அவர் குறுகுறுப்பாகப் பார்த்தார். "அமுதனின் பிணத்தைக் கொண்டு வந்து கூவத்தில் போட்டது ஒரு பெண் என்று எங்களுக்குத் தோன்றுகிறது"

"எதை வைத்துச் சொல்கிறீர்கள்?" சபிதா தைரியமாக அவர் கண்களுக்குள் பார்த்தாள்.

"கூவத்தில் இரண்டு ஷூக்கள் கிடைத்ததே... இரண்டும் அமுதனுடைய ஷூக்கள் தான். ஆனால் சேற்றையெல்லாம் நீக்கிவிட்டு ஷூவுக்குள் பார்த்தபோது மிக மெலிதாய் ஒரு பெண்ணின் பாதச் சுவடு தெரிந்தது. சேறு அப்பியதால் அது பெரும் பாலும் கலைந்து விட்டது. இருந்தாலும் ஒரு பெண் அணிந்திருந்தாள் என்று தோன்றுகிறது. கடற்கரையோரம் நாங்கள் கண்டு பிடித்த ஷூத்தடங்களிலும் ஆராய்ந்தோம். அமுதனின் பாரம் அழுத்தினால் ஏற்படக் கூடிய தடமாக அது இல்லை. மெலிதாக ஒரு ஆணோ, அல்லது ஒரு பெண்ணோ அந்த ஷூக்களை அணிந்து ஏமாற்றப் பார்த்தாள் போல் தான் இருந்தது."

"யார் அந்தப் பெண் என்று ஏதாவது க்ளூ கிடைத்ததா?"

"கிடைத்திருந்தால் இந்நேரம் அரெஸ்ட் பண்ணி கை குலுக்கியிருப்போமே! ஒரு க்ளூவும் கிடைக்கவில்லை. காரில் இருந்த மணலை வைத்து அமுதன் இறப்பதற்கு முன்

கடற்கரையை ஒட்டியிருக்கும் ஒரு வீட்டிற்குப் போய் வந்திருக்கலாம் என்று முடிவு செய்தோம். அப்படியொரு பண்ணை வீடு அவனுக்கு இருப்பதையும் கண்டு பிடித்தோம். அங்கிருக்கும் வாட்ச்மேன் அன்று அமுதனின் கார் வந்தது. அமுதனின் கார் போனது என்று தான் சொல்கிறான். உள்ளே அமுதன் இருந்தானா என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் வாட்ச்மேன் சொல்கிற அதே நேரத்தில் அமுதனுடைய பைக் காணவில்லை என்று வேறொரு இடத்தில் அவன் போலீஸில் புகார் கொடுத்திருக்கிறான்."

"இன்ட்ரஸ்டிங்..."

ரவிகுமாரின் மனைவி உள்ளேயிருந்து இரண்டு கண்ணாடிக் கோப்பைகளில் பழச்சாறு கொண்டு வந்தாள்.

"வீட்டிற்கு வந்திருக்கும் போதும் ஆபீஸ் விஷயம்தான் கொலை கொள்ளை என்று பேச வேண்டுமா?" என்று செல்லமாக அதட்டினாள்.

"அதுதானே!" என்றாள், சபிதா, "உங்கள் மியூஸிக்சிஸ்டத்தைப் பார்க்கலாம் என்று வந்தேன், சார்..."

"பார்க்கலாம் என்றா, கேட்கலாம் என்றா?"

"இரண்டும்தான்..."

"ஐயோ வீட்டில் இருப்பதே அரைமணி நேரமோ, ஒரு மணி நேரமோ அந்த நேரத்திலும் காஸெட்டைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுவார்.



"கம்... என் சிஸ்டத்தைக் காட்டு கிறேன்."

ரவிகுமார் உள்ளறைக்குக் கூட்டிப் போனார். ஸ்விட்சைப் போட்டதும் மெலி தான விளக்குகள் கூரையில் விழித்தன. இதமான வெளிச்சம் அந்த அறையை நிறைத்தது.

மூன்றடி உயர ஸ்பீக்கர்கள் இருபுறம் நிறுத்தப்பட்டு மையத்தில் ஒரு ஹிட்டாச்சி ஆம்ப்ளிஃபையர் பொருத்தப்பட்டிருந்தது.

அதற்கு மேலே சுவரோடு பதித்த மர அலமாரியில் ஒவ்வொரு தட்டிலும், ஆடியோ கேஸட்கள் செங்குத்தாக அணி வகுத்திருந்தன.

"வாவ்! இவ்வளவு கேஸட்டுகளா!" என்று சபிதா குரலில் ஆச்சரியம் காட்டி னாள்.

"இவற்றில் எல்லாவற்றையும் நானே இன்னும் கேட்டு முடிக்கவில்லை. கண்ணை மூடிக் கொண்டு ஒரு காஸெட்டைத் தொடுவேன். கையில் கிடைப்பதை எடுத்து ப்ளே செய்வேன். ஒரு நாளைக்கு இரண்டு கேஸட்களுக்கு மேல் கேட்க முடிவதில்லை" என்றார், ரவிகுமார் சற்று வருத்தமாக.

"அப்படியா?" சபிதா விரல்களைச் சொடுக்கினாள்.

"இப்போது நீங்கள் கண்ணை மூடுங் கள்..."

"காஸெட் செலக்ஷனுக்கா?"

"மூடுங்களேன்!"

ரவிகமார் கண்களை இறுக மூடியதும், சபிதா தன் ஹேண்ட் பேக்கைத் திறந்து சில ஆடியோ கேஸட்டுகளே வெளியே எடுத்தாள். எல்லாம் ஒரே மாதிரியான கேஸட்டுகள்.

"என்னம்மா இது?" என்று ரவிகுமாரின் மனைவி கேட்டதும்,

"ஷ்!" என்று அவளை அடக்கினாள், சபிதா. "சார், நீங்கள் நான் சொல்லும் வரை கண்ணைத் திறக்கக் கூடாது.

தான் கொண்டு வந்திருந்த கேஸட்டுகளை, ரவிகுமாரின் கேஸட்டுகளுக்கு நடுவே அங்கங்கே செருகினாள், சபிதா.

"சார், கண்ணைத் திறக்கலாம்!"

"என்ன சபிதா பண்ணினீர்கள்?"

"பதினாறு கேஸட் கொண்டு வந்திருக்கிறேன், சார்... பதினாறையும் உங்கள் கேஸட்களோடு கலந்து விட்டேன். எதெது என்று நான் சொல்லப்போவது இல்லை. நீங்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு கேஸட்டைத் தொடும்போது, என்றைக்காவது நான் வைத்த கேஸட்களைக் கேட்காமலா போய் விடுவீர்கள்?"

கேஸட்டா இதென்ன சபிதா விளையாட்டு?

"விளையாட்டு தான்..." சபிதா புன்னகைத்தாள்.

"இப்போது ஏதாவது ஒரு கேஸட்டைத் தேர்ந்தெடுங்கள்"

ரவிகுமார் கண் மூடித் தொட்டு எடுத்தது



சிட்டிபாபுவின் வீணை இசை.

சபிதாவும், ரவிகுமாரும் கண்மூடி அந்த இசையில் சற்று நேரம் லயித்திருந்தனர்.

ஒரு பாடல் முடிந்ததும் சபிதா கைகளைக் கூப்பினாள்.

"நான் கிளம்பட்டுமா, சார்?"




உனக்கென்ன பைத்தியமா?

பரசுராமின் கரல் ஆவேசமாக ஒலித்தது

"பைத்தியம்தான்..." - சபிதா கிழேயிருந்து சில புற்களைப் பிடுங்கி தூர எறிந்தாள்.

"உன்னிடம் நேரில் சொல்ல வேண்டும் என்று தான் இத்தனை நாள் காத்திருந்தேன்..."

"நீ சொன்னதை நான் நம்பவில்லை. நீ பொய் சொல்கிறாய். விளையாடுகிறாய்... வேடிக்கை செய்கிறாய்"

"முட்டாள்... மூன்று நாட்களாகத் தொடர்ந்து ஒரே விளையாட்டை விளையாடு வேனா என்று யோசித்துப்பார். நம் கல்யாணம் நடக்காது, நடக்காது, நடக்காது"

"ஏன்?"

"எத்தனை தடவை சொல்வது? எனக்கு

கல்யாணத்தில் ஆசை போய் விட்டது.பரசு... என் வாழ்க்கையில் நோ மேரேஜ்!"

"என்னாயிற்று உனக்கு? ஏன் இப்படி ஹார்ஷாக ஒரு முடிவு எடுத்தாய்?"

சபிதா உலர்ந்த புன்னகையுடன் அவன் கையை புல்தரையுடன் அழுத்தினாள்.

"கேள்விகள் கேட்காதே! ஒரு பெண்ணுக்கென்று சில ரகசியங்களை அனுமதிக்க வேண்டும் ப்ளிஸ்... எனக்கு நீ நிஜமாகவே சந்தோஷம் தர முடிவு செய்தால் எனக்கு எந்தக் குற்ற உணர்வும் வரக் கூடாதென்றால் - நீ சீக்கிரமே ஒரு கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்."

சபிதா அவனுடைய அதிர்சசி கலந்த சோகம் பார்த்து சற்று பரிதாபப் பட்டாள். ஆனாலும் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"நமக்குள் இருக்கும் கடன் பாக்கி யெல்லாம் அடுத்த ஜென்மத்தில் தீர்த்து விடுகிறேன்... ப்ராமிஸ்!

பரசுராம் புன்னகைக்கவில்லை.




"என்ன ரவிகுமார் சார்... எல்லாத் தையும் கேட்டீர்களா? எம்மேல் நீங்க வச்சிருந்த கொஞ்ச நஞ்சம் மதிப்பும் இப்ப அடியோட காணாம போயிருச்சு இல்ல?"



சபிதாவின் குரல் ஸ்பீக்கர்களில் தொடர்ந்தது.

ரவிகுமார் ஈஸிசேரில் கண்கள் மூடி சாய்ந்திருந்தார். "உங்க கிட்ட நேர்லயே வாக்குமூலம் கொடுக்கனும்னு ஒரு மனசு சொன்னது. போலீஸ் கண்டுபிடிக்காத வரைக்கும் நீ சுதந்திரமானவ தான்னு இன்னொரு மனசு சொன்னது. அதனால தான் என் வாக்குமூலத்தை ஒரு கேஸட்ல பதிவு பண்ணி உங்ககிட்ட கொடுத்துட்டேன்"

"இந்த டேப்பை நீங்க கேக்கற தினம் வரைக்கும் நான் சுதந்திரமா இருக்கலாம்னு எனக்கு நானே சலுகை கொடுத்துக் கிட்டேன். அது ரெண்டு நாளா, ரெண்டு வருஷமா, இருபது வருஷமான்னு எனக்குத் தெரியாது"

"ஆனா எத்தனை வருஷம் கழிச்சு வந்து கேட்டாலும் நான் இதை மறுத்துப் பேச மாட்டேன். ஒத்துக்கிட்ட குத்தத்தை யெல்லாம், சட்டத்தையும் செக்ஷனையும் துணைக்கு வச்சுக்கிட்டு, இல்லைன்னு விதண்டாவாதம் பண்ண மாட்டேன்.

"இதைக் கேட்டதுக்கப்புறம் நீங்க தாமதம் பண்ண வேண்டாம். என்னைக் கைது பண்ண புறப்பட்டு வாங்க நான் காத்திட்டிருப்பேன்.

"மறுபடி கோர்ட்ல சொல்ற மாதிரி கடைசியா தொகுத்துச் சொல்லணும்னா...

"அமுதனை அவனோட பண்ணை வீட்ல கத்தியால் குத்திக் கொன்னது நான், லிங்கன், மகேந்திரன் ரெண்டு பேருக்கும்

ஸயனைடு கலந்த சூயிங்கம் கொடுத்து மரண தண்டனை தந்தது நான்.

"பெண்களைக் கேவலப்படுத்தவும், அசிங்கப்படுத்தவும் தயங்காதவர்களுக்கு நான் தந்த தண்டனை சரியா, தப்பானு கோர்ட்டே முடிவு செய்யட்டும்.

"இத்தனை நேரம் பொறுமையா கேட்டதுக்கு தாங்க்ஸ்... இப்ப உடனே என்னைக் கைது செய்ய வரீங்களா?"

காஸெட் நின்றது.

ரவிகுமார் அந்த காஸெட்டை ரெக்கார்டரிலிருந்து விடுவித்தார். அலமாரியில் இன்னொரு தட்டில் தேடி ஒரு பழைய டைரியிலிருந்து ஒரு கவரையும் எடுத்து காஸெட்டின் கீழே வைத்தார்.

லுங்கியிலிருந்து சீருடைக்கு மாறினார்.

காஸெட்டையும், அந்தக் கவரையும் எடுத்தக் கொண்டார்.

மனைவி, குழந்தைக்கு டாட்டா சொல்லி விட்டு, வாசலில் இருந்த ஜீப்பில் ஏறினார்.




சபிதா தொலைக்காட்சியில் வக்கீல்களின் போராட்டம் பற்றிய செய்தியை ஆர்வமில்லாமல் பார்த்துக் கொண்டே



சப்பாத்திக்கு மாவு உருட்டிக் கொண்டிருந்தாள்.

வாசலில் ஜீப் வந்து நிற்பது ஜன்னல் வழியே தெரிந்தது.

ரவிகுமார் இறங்குவதைப் பார்த்ததும், கைகளை சுத்தம் செய்து கொண்டு போய் வாசல் கதவைத் திறந்தாள்.

"வாங்க சார்"

ரவிகுமார் நுழைந்தார். தன் தொப்பியைக் கழற்றி அருகில் வைத்து சோபாவில் அமர்ந்தார்.

சபிதாவும் அமர்ந்ததும், பாக்கெட்டில் இருந்து அந்த காஸெட்டையும், வெள்ளை கவரையும் இருவருக்கும் நடுவில் வைத்தார்.

"கேஸட்டை இனிக்குதான் கேட்டேன்..."

என்றார்.

"பதினைஞ்சு வருஷமா ஒவ்வொரு தடவை நீங்க விட்டுக்கு வரும் போதும், இந்த கேஸட்டைக் கேட்டுட்டுதான் வரங்கனு நெனைச்சு நெனைச்சு ஏமாந்திருக்கேன்..." என்றாள். சபிதா உலர்ந்த புன்னகையுடன் "பதினைஞ்சு வருஷ ஜாமீன்ல இருந்த மாதிரி இருக்கு. சப்பாத்தி செய்ய ஆரம்பிச்சேன்... முடிச்சிட்டு வரலாமா இல்ல என்னை உடனே கூட்டிட்டுப் போகணுமா?" என்று சபிதா எழுந்தாள்.

"உக்காருங்க சபிதா..." என்றார் ரவிகுமார். "இந்தக் கவர்ல என்ன இருக்குனு மொதல்ல பாருங்க..."

சபிதா சற்றே வியப்பாகி, அந்தக் கவரை

எடுத்தாள். பிரித்தாள். அதிர்ந்தாள்.

உள்ளே நான்கு புகைப்படங்கள் இருந்தன. அமுதனின் பண்ணை வீட்டில் அந்த இரவு தானியங்கி கேமிரா மூலம் ஒரே கோணத்தில் ஆனால் வெவ்வேறு சந்தர்ப் பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஒவ்வொன்றிலும், அமுதனின் வெற்று முதுகும், மயக்க நிலையில் சபிதாவின் முகமும் பதிவாகியிருந்தன.

"இது எப்படி?" சபிதா இழுத்தாள்.

"பதினைஞ்சு வருஷத்துக்கு முன் னாலயே என் கைக்கு வந்தாச்சு என்றார் ரவிகுமார். "லிங்கன் செத்ததும், அவன் உடமையெல்லாம் ஆராய்ஞ்சோம். அப்ப கெடைச்ச போட்டோதான் இதெல்லாம் அமுதனோட கொலைல ஒரு பொண்ணு சம்பந்தப்பட்டிருக்கானு போலீஸ் ரொம்ப தீவிரமா நெனைச்சிட்டிருந்த நேரம் அது அந்தப் பொண்ணு யாருன்னு தெளிவா சொல்லி காட்டிக் கொடுக்கற போட்டோஸ்! கடமை தவறாத ஒரு போலீஸ் அதிகாரியா நான் நடந்துக்கணும்னா இதையெல்லாம் அன்னிக்கே கோர்ட்ல கொண்டு போய் சமர்ப்பிச்சிருக்கணும்... செய்யல..."

"ஏன்?"

"வேண்டாம்னு தோணுச்சு... அப்புறம் உரசலாய் பாத்துப் பேசினப்ப கூட நீங்களா ஏதாவது சொல்லுவீங்கனு எதிர்பார்த்திருந் தேன். அமுக்கமா நடந்துக்கிட்டீங்க... உங்க ளால பாதிக்கப்பட்டதா நெனைச்ச அபிராமி கிட்ட தேடிப்போய் மன்னிப்பு கேட்டது தெரிய வந்ததும் சந்தேகமில்லாம இந்த மூணு



கொலையும் உங்களுக்குத் தொடர்பு இருக் குனு புரிஞ்சு போச்சு... ஆனா அந்த மூணு பேருக்கும் அது சரியான தண்டனைன்னு என் மன சாட்சி சொன்னது... பேசாம இருந் துட்டேன்..."

"கேஸட் கேட்டீங்களா?"

"கேட்டதும் தான் முடிஞ்சு போச்சுனு நெனைச்ச கேஸ் மறுபடி திறந்துருச்சு... எனக்கு பதிலா என் மனைவியோ பையனோ இந்த கேஸட்டை கேட்டிருந்தா என்னா யிருக்கும்?"

"என்னாகியிருக்கும்? வாக்குமூலப் கொடுக்கறதுன்னு முடிவு பண்ணினப்புறம் அது பொதுச் சொத்து இல்லையா?"

ரவிகுமார் சிரித்தார்.

"அதனாலேதான் யூனிஃபார்ம் போட் டுக்கிட்டு வந்திருக்கேன்..."

"அரஸ்ட் பண்றதுக்கா?"

"இல்ல, தீர்ப்பு எழுதறதுக்கு..."

ரவிகுமார் எழுந்தார். "அன்னிக்கு நான் இன்ஸ்பெக்டர் இன்னிக்கு டி.எஸ்.பி! காக்கிச் சட்டை போட்லேன்னா, மனசு எளகிப் போய் என்ன காரியம் பண்ணிட்டோ மோன்னு இன்னொரு நாள் பதறும். இப்ப தைரியமா நான் தீர்ப்பு எழுதலாம்"

அந்த காஸெட்டையும், புகைப்படங் கள் அடங்கிய கவரையும் எடுத்துக் கொண்டு சமையலறையில் நுழைந்தார், ரவிகுமார்.

தீக்குச்சி உரசியதும், கேஸ் அடுப்பு நீல நெருப்புச் சுடரைக் கக்கியது. காஸெட்

டையும், புகைப்படங்களையும் அந்த நெருப்புக்குத் தின்னக் கொடுத்தார் ரவிகுமார்.

"சார்... என்ன காரியம் பண்றீங்க?" சபிதா பதறினாள்.

"பதினைஞ்சு வருஷமா திரி எரிஞ்சிட்டிருந்த ஒரு வெடி குண்டை என் வீட்ல வச்சிட்டு நீங்க வந்திட்டீங்க... நான் எப்ப வந்தாலும் உங்களை கைது பண்ண வந்திருக்கேனோன்னு ஒரு பதட்டம் இருந்தது பாருங்க. அந்த தண்டனை போதும் உங்களுக்கு! அந்த வெடிகுண்டை இன்னிக்கு என் கையால செயலிழக்க வச்சாச்சு"

சபிதா கண்களில் நீர் சேர்ந்தது.

"நாம கோர்ட்ல சந்திப்போம் என்றார் ரவிகுமார். "ஆனா வேற எந்தெந்த வழக்குக்காகவோ! உங்க பேர்ல வழக்குக்காக இல்ல..."

சபிதா கண்களில் நீருடன் டி.எஸ்.பி. ரவிகுமாரிடமிருந்து பார்வையை நகர்த்தி அடுப்பைப் பார்த்தாள்.

காஸெட்டையும், புகைப்படங்களை யும் ஆக்ரமித்து சாம்பலாக்கி கம்பீரமாக எரிந்தது நீலச்சுடர்.

## முற்றும்

### நியூஸ் பிட்ஸ்

**லா**ஸ் ஏஞ்சல்ஸில் வீட்டுக் கூரையைப் பொத்துக் கொண்டு விமானம் ஒன்றின் டயர் தொபுக்கடீர்என்று விழுந்ததில் டாய்லெட் போய்க் கொண்டிருந்த ஒருவர் தூக்கி எறியப்பட்டார். மயிரிழையில் தப்பி அதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக ஒரு லட்சம் டாலர் நஷ்ட ஈடு கோரி கோர்ட்டில் கேஸ் நடக்கிறதாம்.